101

லைப்பெரு மன்ற
ழவர் விழா மலர்

# மறுமலர்ச்சிக் காலம்
# இலக்கியச் சிறப்பிதழ்

சிந்தனைச்செல்வர்
அ. செ. முருகானந்தன்
கௌரவ விருது

பரிதாபி வருடம்
தைத்திங்கள்
1973

# சன்சைன் கண்ணாடித் தொழிற்சாலை

சங்கானை

※ அழகானவை ※ உறுதியானவை

விலையிற் குறைந்தவை

மிகச் சிறந்த தரமான கிளாஸ்களை உற்பத்திசெய்யும்

வடமாகாணத்தின் ஒரே ஸ்தாபனம்

*

## SUN SHINE GLASS FACTORY

CHANKANAI

*Sole Distributors :*

**T. S. T. P. T. & CO.**

49, Dam Street, COLOMBO.

## SHANMUGA TRADERS

*

எம்மிடம்:

- தமிழக, இலங்கை பிரபல பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் ஆங்கிலப் பத்திரிகைகளான எல்விஸ்வீக்லி, ஸ்ரார்ஸ் ஸ்ரைல் ஆகியனவும் பெற்றுக்கொள்ள லாம்.
- சைக்கிள், பெற்றோமாக்ஸ், வாட்டர் பம்ப் போன்ற இயந்திர வகைகளும் உதிரிகளும் குறைந்த விலையில் விற்பனையா கின்றன.
- சைக்கிள், பெற்றோமாக்ஸ், வாட்டர் பம்ப் முதலியன சிறந்த முறையில் உடனுக்குடன் பழுது பார்ப்பதற்குத் தொடர்பு கொள்ளவும்.

*

**சண்முகா றேடேர்ஸ்**

துரையப்பாபிள்ளை வீதி

அம்பனை : தெல்லிப்பழை

## DIAMOND HOUSE

*

அழகான உறுதியான

சிறந்த தங்க வைர நகைகளுக்கு

விஜயம் செய்யுங்கள்

**DIAMOND HOUSE LTD.**

JEWELLERS

79, Kannathiddy Road, JAFFNA

Phone: 7036

141, 143, Sea Street, COLOMBO

Phone: 36321

பி. நடராஜசன்

கலைப்பெருமன்றம்
உழவர் விழா மலர்

# மறுமலர்ச்சிக் காலம்

## இலக்கியச் சிறப்பிதழ்

தைத்திங்கள்
முதலாம் நாள்
மகாஜனக் கல்லூரியிற்
கொண்டாடிய
ஐந்தாவது ஆண்டு
உழவர் விழா வெளியீடு

கலைப்பெருமன்றம்
பாவலர் துரையப்பாபிள்ளை வீதி
அம்பனை
தெல்லிப்பழை

பரிதாபி.
1. 1. 1973

## மன்றக் காப்பாளர்கள் 72-73

பெருந்தலைவர்கள் : ❀ தெ. து. ஜெயரத்தினம், B. A., J. P.
முன்னாள் அதிபர்
மகாஜனக் கல்லூரி

❀ ம. சிதம்பரநாதன்
தலைவர்
ஊராட்சி மன்றம்
தெல்லிப்பழை

❀ தேசியப் பேரவை உறுப்பினர்
காங்கேசன் துறை

தலைவர் : ஆ. சிவநேசச்செல்வன், B. A. Hons. [Cey.]
தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி

துணைத்தலைவர் : பி. நடராசன்
ஆசிரியர்
மகாஜனக் கல்லூரி

பொதுச்செயலாளர் : க. முருகதாசன்


துணைச்செயலாளர் : ப. வை. ஜெயபாலன்

பெரும்பொருளாளர் : பொன். நாகரத்தினம்
ஆசிரியர்
சைவப்பிரகாச வித்தியாசாலை
வரணி

பொருளாளர் : த. குணரத்தினம், B. A. [Cey.]

செயற்குழு உறுப்பினர்கள் : சி. முருகையா
வை. குணாளன்
செ. கமலநாதன்
நா. திருபாலசிங்கம்
நா. நவரத்தினம்

எண் ஆய்வாளர்கள் : சீ. கிருஷ்ணமூர்த்தி
மகாஜனக் கல்லூரி
க. சிவபாலன்



அ. செ. மு.

மறுமலர்ச்சி எழுத்தாளர்
**திரு. அ. செ. முருகானந்தனின்**
இலக்கியச் சேவையைப் பாராட்டித்
தெல்லிப்பழை, அம்பனைக்
கலைப்பெருமன்றத்தினர்
**“சிந்தனைச்செல்வர்”** என்ற
கௌரவ விருதினை வழங்கி
ஐந்தாவது ஆண்டு உழவர் விழாவிற்
சிறப்புச்செய்த ஞான்று
வெளியிட்ட இலக்கியச் சிறப்பிதழ்.

**மலர்க்குழு:**

ஆ. சிவநேசச்செல்வன், *B. A. Hons. [Cey.]*

மயிலங்கூடலூர் பி. நடராசன்

பொன். நாகரத்தினம்

வை. குணாளன்

*Space Donated by*

**Thirumakal Press**

**CHUNNAKAM**

# நன்றியும் நம்பிக்கையும்

பொங்கல் விழா, தமிழர்க்குரிய தனிப்பெரும் விழா. தமிழ் கூறும் நல்லுலகம் ஆண்டுதோறும் தைத்திங்கள் முதல்நாளிற் பொங்கல் விழாவைக் கொண்டாடுகிறது. வேட்டுவ நிலையிலிருந்து மறுமலர்ச்சி பெற்று உழவர் நிலைக்கு உயர்ந்தமை மனித இனத்தின் அறிவு மலர்ச்சிக்கு வழிகோலியது.

வையத்தை வாழ்விக்க உழைக்கும் உழவர்களின் - உழைப்பாளிகளின் இத் திருநாளைக் கலைப்பெருமன்றம் ஆண்டுதோறும் கொண்டாடி மகிழ்கிறது. இவ் விழாக்களில் ஆண்டுதோறும் கலை இலக்கியத் துறையில் முன்னிலை வகிப்போரைப் பாராட்டி வருகிறது. கடந்த ஆண்டு முதல் இலக்கியத்துறையில் அதிக ஆர்வத்துடன் உழைத்து வருகிறது. இஃது எமது ஐந்தாவது ஆண்டு; அறிவு முனைப்போடு முகிழ்க்கும் ஆண்டு. இதன் சின்னமாக இம் மறுமலர்ச்சிச் சிறப்பிதழ் வெளிவருகிறது.

தமிழிலக்கிய ஆய்வுத்துறையில் இப்போது ஒரு விழிப்புணர்ச்சி தோன்றியுள்ளது. காலந்தோறும் தமிழ் வளர்ந்துவந்தமை பற்றிய பொது ஆய்வும், அவ்வக்காலங்களிலே தமிழ் வளர்த்த பெருமக்கள் பற்றிய சிறப்பாய்வும் வரன்முறையாகக் காய்தல், உவத்தல் அற்ற நிலையில் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்த தமிழிலக்கிய வளர்ச்சி பற்றிப் பூரண ஆய்வு நிகழ்த்தப்படுவது இன்றியமையாததாகும்.

ஈழத்தின் தமிழிலக்கிய வரலாற்றில், மறுமலர்ச்சிக் காலம் சிறப்பு வாய்ந்தது. மறுமலர்ச்சிக்கால எழுத்தாளரான கவிஞர் மஹாகவி பற்றிய சிறப்பு ஆய்வுத் தொகுப்பொன்றை நாம் முன்னர் வெளியிட்டோம். இப்போது மறுமலர்ச்சிக் காலம்பற்றிப் பொதுவாகவும், அதன் உயிர்ப்பு விசையாகத் தொழிற்பட்ட சிந்தனைச் செல்வர் அ. செ. முருகானந்தன் அவர்கள் பற்றிச் சிறப்பாகவும் சிந்திக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

சிந்தனைச் செல்வர் அ. செ. மு. எழுத்தே தொழிலாக வாழ்பவர். கால்நூற்றாண்டுக்கு மேலாக அவர் எழுதி வெளியிட்ட படைப்புக்கள் எண்ணற்றவை. மிகக் குறுகிய காலத்தில் வெளியாகும் இம்மலர் முழுமையானதன்று. எதிர்கால முயற்சிகளுக்கு இது வழிகாட்டியாக அமையும் என நம்புகிறோம்.

சிந்தனைச் செல்வர் அ.செ.மு. அவர்களைப் பாராட்டிச் சிறப்புச் செய்ய முயன்றவர்கள் பலர். அவர்களை நேரிற்பாராட்டிப் பட்டமளிக்கும் பெரும்பேறு எமக்கு மட்டுமே கிடைத்துள்ளது. சிந்தனைச் செல்வருக்கு எமது நன்றிகள்.

குறுகிய காலத்தில் சிறப்பானதொரு மலரை வெளியிடுகிறோம். கலாநிதி க. கைலாசபதி, திரு. சி. தில்லைநாதன் எம்.ஏ.,எம்.லிற்., இலக்கியச் செல்வர் கனக. செந்திநாதன், கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை, வரதர், புலவர் ம. பார்வதிநாதசிவம், கவிஞர் நா. ஆறுமுகம், 'சாரதா', சிந்தனைச் செல்வர் அ. செ. மு. ஆகியோர் மலருக்கு மணமூட்டும் படைப்புக்களை வழங்கியுள்ளனர். அனைவர்க்கும் நன்றி கூறுகின்றோம்.

விளம்பரம் தந்த பெருமக்களுக்கும், விழாச் சிறப்புற உதவி புரிந்தவர்களுக்கும், மிகக் குறுகிய காலத்தில் மலரைச் சிறப்புற அச்சிட்டளித்த குகன் அச்சகத்தினர்க்கும், அட்டையை அழகுற அச்சிட்ட திருமகள் அழுத்தகத்தினர்க்கும் எமது நன்றிகள்.

—மலர்க்குழு

# வாழி முருகானந்தன்!

"சாரதா"

பாரதி காலந் தொட்டுப் பரவிய மறும லர்ச்சி
ஆர்வமெம் மீழ நாட்டில் ஆக்கிய வூக்கத் தாலே,
சீரணி யெனத்தி ரண்ட சிலர்தமிழ் வளர்ச்சி யொன்றே
தாரக மாகக் கொண்டு தரமுறு பணிகள் செய்தார்!

கவி,கதை, நாவல் மற்றுங் கட்டுரைத் துறையி லெல்லாம்
நவநவ மாய மைந்த நற்படைப் புகளைச் செய்தே,
கவனமிப் பாலு மீர்க்கக் கணிசமாய்ப் பணிகள் செய்தார்;
அவர்களில் ஒருமுன் னோடி: **அளவையூர் முருகா னந்தன்!**

தொய்வுறு மெல்லு டம்பு; சூழ்ந்தறி கின்ற நோக்கு;
மெய்மையை அவாவும் பேச்சு; மேதையின் முகவி லாசம்;
செவ்விய யாழ்ப்பா ணத்துச் செந்தமிழ் வழக்க மைந்த
திவ்விய எழுத்து; மேலாஞ் சிந்தனைத் திறமும் உள்ளோன்!

உழைப்பவ ரின்னல் காட்டும் ஒருகதை: "மனித மாடு";
கலைக்கதை; யாழ்ப்பா ணத்துக் காளை "வண்டிச் சவாரி";
இலட்சியத் தொடர் நவீனம்; இனிய "யாத்திரை"கள் ஆதி
பலப்பல தமிழேட் டின்கண் படைத்தநம் பேனா மன்னன்!

ஈழகேசரி வளர்த்த இளமெழுத் தாள ராகிச்
சூழலை நம்பி நல்ல தொண்டுகள் செய்யும் நண்பர்;
யாழ்நகர் "**மறுமலர்ச்சி**" இலக்கியச் சங்கத் திற்கோர்
மூலகா ரணரு மாகி 'மூச்சு'டன் உழைத்த சாது!

அன்பரின் அடக்கத் தாலும், அணைதுணை யின்மை யாலும்,
பண்புறு மவரி னுக்கப் பணிகளை நூல ரங்கிற்
கண்டிட முடிய வில்லை; கைகொடுத்(து) அவரை யூக்க
அம்பனைக் கலைமன் றத்தார் அணிதிரள் கின்றார்; வாழி!

# இன்பம் பொங்குகவே

கவிஞர் நா. ஆறுமுகம்

மங்கலதீபம் என்றுமிலங்கி யின்பம் ஓங்குகவே
மஞ்சள்குங்குமம் நன்றுதுலங்கத் துன்பம் நீங்குகவே
சங்கமலிங்கம் நின்றருள்புரிய அன்புந் தாங்குகவே
சந்தமிருந்தமி ழெங்குமிலங்கப் பொங்கல் பொங்குகவே

கன்னல்முக்கனி செந்நெல் செறியச்செல்வம் மல்குகவே
கண்டுந்தேனும் பாலும்நிறையக் கனிவும் நல்குகவே
மன்னும்நீதியு மாண்பும்வளர மணியும் பல்குகவே
துன்னும்அறமும் திறமும்கிளரப் பொங்கல் பொங்குகவே

ஏழைசொரியுங் கண்ணீர்மாற இதயம் பொங்குகவே
ஊழைமாற்றும் உழவர்வாழும் உதயந் தங்குகவே
வாழைபோலத் தானம்புரிவார் வறுமை மங்குகவே
சாழைபொழியுங் குழந்தையின்பப் பொங்கல் பொங்குகவே

சாதிப்பேயின் வாதமடங்கிச் சால்பும் பொங்குகவே
நீதிச்செல்வம் நின்றுவிளங்க நேர்மை பொங்குகவே
வீதிதோறும் கலைஞர் வளரும் வீரம் தங்குகவே
ஓதியுணர்ந்துள் ளொளியைக்காணப் பொங்கல் பொங்குகவே

காலைக்கதிரென ஞானம்வளரப் பொங்கல் பொங்குகவே
மாலைமதியின் தானம்வளரப் பொங்கல் பொங்குகவே
சாலைதோறும் தொழில்கள்வளரப் பொங்கல் பொங்குகவே
நூலைக்கற்கும் எழிலும்வளரப் பொங்கல் பொங்குகவே

ஒற்றுமையுள்ளம் பெறவே அன்புப் பொங்கல் பொங்குகவே
சுற்றம்வாழச் செயல்கள்புரியப் பொங்கல் பொங்குகவே
கற்றறிகண்ணிய மிகவேதெரியப் பொங்கல் பொங்குகவே
இற்பெருவாழ்வி னினிமைபெறவே இன்பம் பொங்குகவே.

* * *

# பொங்கல்
# தரும்
# இன்பம்

புலவர் ம. பார்வதிநாதசிவம்

''விண்ணெங்கும் பொன்படைக்கும் கதிரோன் கீழ்வான்
வீதியிலே விருந்தையெண்ணி மகிழ்கின் றுன்நீர்
மண்ணெங்கும் பொங்கிடுவீர் மங்கை மார்நும்
மலர்க்கரத்தாற் புதுப்பானை கொள்வீர்'' என்றே
பண்ணெங்கும் இசைத்தனவே சேவற் கூட்டம்
பாரெங்கும் மகிழ்ந்திடவே செடிகள் தாமும்
''வண்ணங்கொண் டோம்மலர்கட் குன்பால் இன்றே
வாழ்த்துகின்றோம்'' என்றனவே எழிலினோடே

''அறவோர்கள் தம்குற்றம் நீக்கிப் பின்னர்
அவனியது குற்றத்தை நீக்கும் உண்மை
அறிவீர்கள் இவ்விதம்தான்'' என்று மக்கட்
கறிவிப்பான் போல் வெய்யோன் கடலுள்மூழ்கி
முறையாகி நீராடி வையந் தன்னை
மூடியவல் லிருள்மாசு தன்னை நீக்கித்
திறனோடு தன்கடனைச் செயற்கு வந்தான்
சிறியோர்கள் பெரியோர்கள் எனப்பா ராதோன்

''எங்கேதான் பிறந்திடினும் ஏழை செல்வர்
எக்குலத்தோ ராயிடினும் தமிழ் இனத்தார்
இங்கேஎன் முன்னிலையில் ஒன்றே யாவார்
எல்லோரும் பொங்கிடுவீர்'' என்று பொன்சொல்
பொங்கிவரும் தமிழமுதின் சுவை கண்டார்க்குப்
பொலிவுடைய கதிரோனும் கூற மக்கள்
பொங்காது விடுவாரோ? வீடு தோறும்
பொங்கிடவே தொடங்கினரே மகிழ்ச்சி பொங்க

பொங்கலுக்கு வேண்டியவை அனைத்தும் சேர்த்துப்
''பொற்றொடியே உன்திறனைக் காட்டாய்'' என்றே
அங்கிருந்தான் உழைத்துண்ணும் உயர்ந்தோன் இல்லாள்
''அதனைஎடும் இதனை எடும்'' எனத் தன்னாட்சி
பொங்கலன்றும் அன்புடனே புரிந்தான் சொல்லின்
பொலிவுகண்டு பிறர்க்கடிமை யாகாதானும்
''இங்குனக்கு நான் அடிமை'' என்று சொல்லி
இனிதுரைத்தே ஏவலெல்லாம் செய்ய லானாள்

செந்நெல்லும் தேன்கரும்பும் தயிர்பால் நெய்யும்
செழிக்காத தமிழர் வீடில்லை; வீட்டில்
மின்னலிடை மாதர்தம் திறனை எல்லாம்
விளக்கினவே கோலங்கள் இளைஞர் செய்த
தென்னந் தோரணங் களொடு மாவிலைகள்
''தெரிந்திடுவீர் பொங்கலென'' வீடு தோறும்
இன்தமிழில் ''உண்டிடுவீர்புதுப் பொங்கல் நீர்''
என அழைத்தார் பசிகண்டார் யாருமில்லை.



'சங்கீத பூஷணம்,
பண்ணிசைச் செல்வி
இன்னிசைக் கலாநிதி
**செல்வி நாகம்மா கதிர்காமர்**
ஆசிரியை, மகாஜனக் கல்லூரி
ஈழத்தின் புகழ் சிறக்கும் வண்ணம்
தமிழக இசைவிழாவிலே
இன்னிசை விருந்து அளித்தமையைக்
கௌரவித்துப் பாராட்டிக்
**கலைப்பெரு மன்றம் வாழ்த்துகின்றது**
இசைவாழ்வு இசையாகுக'

# GNANAMS

மனதைக் கவரும் படங்களெடுக்கவும்
தெளிவான புளக்குகள் செய்யவும்

## ஞானம்ஸ் ஸ்ருடியோ

யாழ்ப்பாணம்

தொலைபேசி எண் : 7067

---

*மறவாதீர்கள் !*

இன்று நேற்றல்ல
இற்றைக்குப் பத்துவருட காலமாக

★ ஒலி - ஒளி அமைத்தல்
★ நாடக செற்றிங் செய்தல்
★ எழுத்து வேலைகள் செய்தல்
★ விளம்பர அறிவித்தல் செய்தல்
மற்றும்
★ கலை அம்சம் நிரம்பும் வேலைகளில்

வடமாகாணத்தில் புகழ்பெற்றவர்கள்.

## 'லோஹேரஸ் ஆர்ட்ஸ்'

(யாழ். கச்சேரிக்கு அருகில்)
கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

---

நவநாகரீக முறையில்
உங்கள் ஆடைகளை அணியவேண்டுமா?
இன்றே சிறந்த முறையில்
குறைந்த செலவில் ஆடைகளைத்
தைத்து அளிக்கும்

## "வெல்பிற்" றுக்கு

## WELFIT

விஜயம் செய்யுங்கள்.

20, GRAND BAZAAR

**JAFFNA**

**கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை**

# அ. செ. முருகானந்தன் – வாழ்வும் பணியும்

ஈழத்து இலக்கியத் துறையிலே தமக்கெனச் சிறப்பான ஓர் இடத்தை வகித்துக் கொண்டிருக்கும் அ. செ. முருகானந்தன் 1921ஆம் ஆண்டில் மாவிட்டபுரக் கிராமத்திலே பிறந்தார்கள்.

“நான் பிறந்து வளர்ந்த குடும்பம் ஓரளவு பெரியது. அக் குடும்பத்திலுள்ளவர்கள் எல்லாரும் கலையார்வம் கொண்டவர்கள். இதனால் நான் இளமையைக் கழித்த அந்த மனை எந்த வேளையிலும் கலகலப்பாக இருக்கும். இசையும், ஓவியமும் அக் குடும்பத்தின் பரம்பரைச் சொத்துக்கள். என் பாட்டியாரும், அன்னையும் ஓய்வு நேரங்களிலே புராண இதிகாசக் கதைகளை வாசிப்பார்கள். கல்லூரிக் கல்வி பெற்றுக் கொண்டிருந்த அக்குடும்பத்து இளைஞர் ஒருவர் தாம் கற்றுவந்த பாடத்திலுள்ள கதைகளை அழகாக எடுத்துக்கூறி என்போன்ற இளைஞர்களைக் களிப்பூட்டுவார். இத்தகைய சூழலிலே நான் வளர்ந்தேன். இதனால் என்னிடத்தே கதைகளைக் கற்பனையில் எழுதவேண்டுமென்ற ஆவல் முளைகொண்டுவிட்டது.”

இவ்வாறு தமது சிறுகதை எழுதும் முயற்சிக்குத் தூண்டுகோலாக அமைந்திருந்த காரணங்களை ‘அ. செ. மு.’ ஒரு தினம் எனக்கு விளக்கிக் கூறினார்கள். அவர் விபரித்த அக் குடும்பம் பற்றிய செய்தியை நட்புத் தொடர்பினால் அறிந்திருந்தவனாதலாலே அவர் கூற்றில் அமைந்திருந்த உண்மையை யான் உணர்ந்தேன். இளமையில் ஏற்படும் மனப்பதிவுகள் பிற்காலத்திலே நலந்தரும் வகையில் விரிந்து மலருமென்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றார் ‘அ. செ. மு.’

முருகானந்தனது இளமைக் காலம் மாவிட்டபுரம், அளவெட்டி ஆகிய கிராமங்களில் மாறி மாறிக் கழிந்தது. அதனால் அவரது இளமைக் கல்வியும் மேற்கூறப்பட்ட கிராமங்களில் உள்ள பல பாடசாலைகளில் நிகழ்ந்தது. எனினும், சில நாட்களின் பின் அவர் அளவெட்டியையே தமது நிரந்தர இருப்பிடமாக்கிக் கொண்டார். அதனாலேதான் அவர் தமது பெயரின் முதலிலே ‘அளவெட்டி’ என்பதைக் குறிப்பிடும் ‘அ’ என்ற எழுத்தைச் சேர்த்திருக்கின்றார். பிரபல எழுத்தாளராய்ப் புகழ் நிறுவி மறைந்த அ. ந. கந்தசாமியின் பெயரின் முன்னமைந்துள்ள அகரமும் அளவெட்டியையே குறிக்கின்றது என்பதையும் இவ்விடத்தே சொல்லி வைக்க விரும்புகிறேன்.

முருகானந்தன் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே தமது கல்வியைத் தொடர்ந்தார். எழுத்துத் துறையில் அவர் ஈடுபடுவதற்கு மகாஜனக் கல்லூரியும் ஓரளவுக்குத் துணைபுரிந்ததென்றே கூறலாம். தமது தமிழார்வத்தைத் தூண்டியும், தாம் எழுதுங் கட்டுரைகளை வியந்தும் தமது தமிழ்ப்பாட ஆசிரியராக வாய்த்த திரு. சுந்தரம்பிள்ளை அவர்கள் தமது பிற்காலத் திறமைக்குப் பேராதரவாக இருந்தார் என்பது முருகானந்தன் அவர்களது நன்றிகலந்த கூற்றாகும். இவ்வாசிரியரேயன்றி திரு. செ. சின்னத்துரை ஆசிரியரும், அதிபர். திரு. கா. சின்னப்பா அவர்களும் தமது தமிழ்த் தேர்ச்சிக்கும் ஆக்க பூர்வமான படைப்புக்களுக்கும் பேருதவி புரிந்தார்களெனவும் அவர் கூறுகின்றார். இந்த நல்லாசிரியர்களின் பணியினாலேதான் அ. ந. கந்தசாமியும், ‘மஹா

கவி' து. உருத்திரமூர்த்தியும் எழுத்துத் துறையிலே பிரபலம் எய்தினர்கள் எனவுந் துணிந்து கூறிவிடலாம். அ. செ. மு., அ. ந. க., மஹாகவி ஆகிய மூவரும் மகாஜனக் கல்லூரியின் மும்மணிகள் எனப் போற்றப்படுகின்றமையை நாடறியும்.

அ. செ. மு. கல்லூரியிற் படித்துக் கொண்டிருக்கும்போதே இந்தியப் பத்திரிகையாகிய ஆநந்தபோதினியில் 'கண்டிக் கடைசி அரசன்' என்ற உரைச் சித்திரம் ஒன்றை எழுதியிருந்தார். இதுவே முதலிற் பிரசுரமான அவரது எழுத்து முயற்சியாகும். மிகச் சிறு வயதிலேயே இந்தத் தகுதி அவருக்குக் கிடைத்தமையைக் கொண்டு நாம் அவருடைய எழுத்தாற்றலின் வேகத்தைக் கணிக்கமுடியும். இக் காலத்திலே தான் அவர் தம்மொத்த இளைஞர்களோடு சேர்ந்து அளவெட்டியில் ஒரு வாசிகசாலையை நிறுவினர். அந்தச் சிறியகொட்டிலிலே 'மறுமலர்ச்சி' என்றகையெழுத்துப்பத்திரிகையை வெளியிட்டு இலக்கிய உலகிலே ஒரு புதிய சஞ்சிகை உருவாதற்குக் காரணமான முதன் முளைகள் வளர்ச்சிபெற்றன. ஆம், 'அ. செ. மு.' வின் இலக்கிய நண்பர்களே பிற்காலத்தில் யாழ்ப்பாணத்திலே கூடிய மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் ஆவர்.

இந்த வாசிகசாலையிற் கூடிய இலக்கிய நண்பர்கள் அக்காலத்தில் ஈழகேசரியில் அமைந்த 'கல்வி அநுபந்தம்' என்ற மாணவர் பகுதி மலருக்குக் கதை, கட்டுரை, கவிதை ஆகியவற்றை அனுப்பி, பிரசுரத் தகுதியும் பெற்றனர். அந்தப் பத்திரிகை நடாத்திய பல போட்டிகளிற் பரிசுகளும் பெற்றனர். அப்பத்திரிகையை நடாத்திய அதிபர் திரு. நா. பொன்னையாவினதும், ஆசிரியர் திரு. சோ. சிவபாதசுந்தரத்தினதும் பெருமதிப்புக்கு அ. செ. மு. ஆளானர். கல்லூரியில் எட்டாவது வகுப்பிற் கற்றுக்கொண்டிருக்கும் காலத்திலேயே அ. செ. மு. பத்திரிகை வாசகர்களுக்கு நன்கு பரிச்சயமான எழுத்தாளராகிவிட்டார். அவருக்கு இக்காலத்திலே கல்வியை மேலுந் தொடர முடியவில்லை. கணிதம் முதலிய பாடங்களிற் சித்தியடைய முடியாமையோடு உடல்நலக்குறைவும் பீடித்துக்கொள்ளவே அ. செ. மு. கற்பதை நிறுத்தி, பத்திரிகைத் தொழிலைப் பற்றிக் கொள்ளலாம் என்று விரும்பினர். இவரது திறமையை முன்னரே அறிந்து வைத்திருந்த ஈழகேசரி அதிபர் திரு. பொன்னையா அவர்கள் 1941 இல் அ. செ. மு.வை விரும்பி ஏற்று ஆசிரியர் குழுவினருள் ஒருவராக்கினர். அன்று இராஜ. அரியரத்தினம் ஈழகேசரியின் ஆசிரியராக இருந்தார். அவர் அப்பதவியின் நீங்கியபின் ஆசிரியராக அமர்ந்த அ.செ.மு. வியக்கத்தக்க வகையிலே ஈழகேசரியை நடாத்தி வந்தார். அன்று தொடங்கிய பத்திரிகைத் தொடர்பு இன்று வரையும் நீங்காமல் இருக்கின்ற நிலையை அ.செ.மு. பேணி வருகின்றார்.

1943இல் கொழும்பிலே அன்பர் பூபதிதாசர் தொடங்க விரும்பிய ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராகும் பொருட்டு அங்கு சென்ற முருகானந்தன் அந்நோக்கம் சித்தி பெருமற்போக வீரகேசரிப் பத்திரிகையிலே எழுத்தாளராகச்சேர்ந்துகொண்டார். ஓராண்டின் பின்னர் யாழ்ப்பாணம் வந்த அவர் 1945இல் மறுமலர்ச்சிச் சஞ்சிகையை வெளியிடும் முயற்சியில் 'வரதர்' அவர்களோடு சேர்ந்து அதன் ஆசிரியப் பதவியிலே தங்கினர். இந்தக் காலமே 'மறுமலர்ச்சி' சஞ்சிகை வடிவில் வெளிவந்து ஈழத்து இளம் எழுத்தாளர் பரம்பரையைத் தூண்டி வளர்த்த காலம் ஆகும். வாழ்க்கைக்கு வேண்டிய ஊதிபம் பெற இயலாக் காரணத்தினலே தொழில் ஏதும் தேட எண்ணித் திருகோணமலைக்குச் சென்றார் முருகானந்தன். அங்கு தொழில் கிடைக்கவில்லை. ஆனல் தாழையடி சபாரத்தினத்தின் நட்புக் கிடைத்தது. மீண்டும் எழுத்துத்துறையும், பத்திரிகைத் தொழிலும் அவரை வந்தடைந்தன. அங்கிருந்து சிறப்புப் பத்திரிகை நிருபராகக் கடமை பூண்டு வாழ்ந்தார். அக்காலத்திலேதான் 'எரிமலை' என்ற ஒரு பத்திரிகையும் வெளியிட்டார். இஃது அவர் தனிமுயற்சியே யாகும். அது ஐந்து இதழ்கள் வெளிவந்த பின் நின்றுவிட்டது.

1949இல் மீண்டும் முருகானந்தன் கொழும்புக்குச் சென்றார். அங்கே 'சுதந்திரன்' பத்திரிகை ஆசிரியர் குழுவில் ஒருவராக அமர்ந்தார். செய்திப் பகுதி ஆசிரியராக இருந்தபோதினும், தமது மிகத் திறமையான படைப்புக்களை அக்காலத்திலேதான் அவர் ஆக்கினார். இதன் பின் 1951இல் இருந்து ஐந்து ஆண்டுகள் 'வீரகேசரிப் பத்திரிகை'யின் ஆசிரியர் குழுவில் அமர்ந்து அரிய எழுத்துப் பணிகளைமேற்கொண்டார். இக்காலத்தில் இவரை வருத்திய 'ஆஸ்த்துமா' நோய் மிகவும் கருத்தாகத் தம் பணியைச் செய்வதற்கு இவரை அனுமதிக்கவில்லை. அதனால் வீரகேசரியில் பணியாற்றிய இவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து ஈழகேசரியில் ஓராண்டு ஆசிரியராக இருந்தார். 1958இன் பின் வறுமையும், நோயும் நன்கு பற்றிக்கொள்ளவே அ.செ.மு. சிறிது காலம் அஞ்ஞாத வாசம் மேற்கொண்டவர் போல அடங்கியிருந்துவிட நேர்ந்தது. எனினும் வானொலி நாடகத்திற்குப் பரிசு கிடைத்தது இக்காலத்திலே தான் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

ஐந்து ஆண்டுக்கால ஓய்வின் பின் முருகானந்தன் 1963இல் இருந்து இன்றுவரை ஈழநாடு பத்திரிகையில் தொடர்பு கொண்டு எழுத்துப் பணிசெய்து வருகின்றார். சில காலம் அப்பத்திரிகையின் வார மலருக்குப் பொறுப்பாளராக இவர் அமர்ந்திருந்தார். அக்காலத்தில் இவரது வாழ்க்கை அநுபவங்களும், தொடர்பு பூண்ட மக்களின் இயல்பும் இவருடைய எழுத்துக்களில் இடம்பெற்று ரசிகர்களின் பாராட்டுக்களை அடைந்த கட்டுரைகள் பலவாக வெளிவந்தன.

வாழ்வை எழுத்துத்துறைக்கே அர்ப்பணித்து, அந்தத் துறைக்கு வேண்டிய படைப்பாற்றல் மிகுதியும் பெற்றிருந்தும் அவற்றை நூல்வடிவமைப்பில்வெளியிடுதற்கியலாது நோயும் வசதிக்குறைவும் பெற்று மனமடிவுடன் வாழும் எழுத்தாளர் இவரன்றிப் பிறர் இருக்க முடியாது என்பது என் கருத்து. இன்று இந்தச் சிறந்த எழுத்தாளர் ஒரு சிறிய கொட்டிலிலே தமது அன்னையார் துணையோடு வாழ்ந்து வருகின்றார். எழுதுவதற்குரிய பேனா, காகித வசதிகள் தாமும் இவரிடம் இல்லாத நிலைமையைக் காணும்போது எம்மை அறியாமலே எமது கண் கலங்கும் நிலையைப் பெறுகின்றது. இங்ஙனமாயினும் தம்மைத் தேடிவரும் நண்பர்களை உபசரிப்பதில் முருகானந்தனும், அவரது அன்னையும் மிகுந்த கருத்துடன் இருக்கிறார்கள். தாம்பூலம், தேநீர் முதலிய உபசரிப்போடு இன்முகமும் அன்பு கனிந்த உரையும் தந்து மகிழ்வூட்டுகிறார்கள். எவ்வளவோ இலக்கியப் பணிகளை இவரிடமிருந்து பெறுவதற்கு வாய்ப்பிருந்தும் இவர் இவ்வாறு 'முடங்கிக்' கிடக்கும் நிலைநேர்ந்திருக்கிறதே என்று தான் முருகானந்தனைச் சந்தித்து உரையாடி மீளும் இலக்கியப் பிரியர்கள் எண்ணிச் செல்கின்றார்கள்.

முருகானந்தனது படைப்புக்களில் நூல் வடிவம் பெற்றது 'புகையில் தெரிந்த முகம்' என்ற ஒரு குறுநாவலாகும். மற்றையவை பத்திரிகையில் வெளிவந்தமையோடு அடங்கிவிட்டன. ஈழநாடு பத்திரிகையில் வெளியான 'யாத்திரிகன்' என்பது இவரது நாவலாகும். இதைத்தவிர 'வசந்த மல்லிகை' என்ற ஒரு சிறுநாவலும் இவரால் எழுதப்பட்டுள்ளது. 'மனித மாடு' என்ற சிறுகதை தென்னிந்தியாவிலே தொகுக்கப்பட்ட 'கதைக் கோவை' ஒன்றில் இடம் பெற்று அங்குள்ள அறிஞர்களது ஏகோபித்த பாராட்டையும் பெற்றது. இவர் மிகச் சிறந்தனவான 30 சிறு கதைகளை எழுதியிருப்பதாக அடக்கமாகக் கூறுகிறார். ஆனால் இவர் எழுதிய கட்டுரைகள் மிகப்பல. சிறந்த சில நாடகங்களும் இவரது படைப்புக்களாக உள்ளன.

''நீங்கள் எழுதிய சிறுகதைகளுள் உங்களுக்கு மிகப்பிடித்தமானது எது?'' என யான் கேட்டேன். சிறிது சிந்தித்துவிட்டு ''நான் மிக முயன்று ஓர் இலட்சியத்தை அமைத்து ஒரு கதை எழுதியுள்ளேன். அது சிங்கள நாட்டைக்களமாகக் கொண்டு எழுதப்பட்டது. எனது சிந்தனையிலே தோன்றிய கற்பனை முழுமையாகத் திறம்

பட அமைந்தது அந்தக்கதை. அதுவே எனக்குப் பிடித்தது'' என்றார்.

''எல்லாம் சொல்லிவிட்டீர்கள், கதையின் பெயரை மட்டு கூறவில்லையே'' என்றேன்.

''ஓகோ'', என்று சிறிது சிரித்துவிட்டு ''அக் கதையின் பெயர் 'மாணிக்கப் பொன் மயிலாள்' என்பது. ஈழநாடு வாரமலரில் வெளிவந்தது'' என்றார். யான் அதன் மேல் ஒன்றும் பேசவில்லை. ஏனெனில் அந்தக் கதையை நான் வாசிக்கவில்லை.

முப்பது ஆண்டுகளின் முன் பார்த்த அதே உருவத்தில் - அதனிலும் சிறிது மெலிந்த ஒல்லியான வடிவத்தில்-முருகானந்தன் இன்று காட்சி தருகிறார். விபூதியைப் பட்டையாகப் பரவிப்பூசிக் கொண்டு ஒரு சால்வையால் தம்மைப் போர்த்த படி படுக்கையிற் சாய்ந்திருந்து கொண்டு மேல் நோக்கிச் சிந்தித்தபடியே அவர் இருப்பார். அவரைப் பற்றியிருக்கும் நீண்ட நாளைய நோய் இனனும் அவரை விட்டு நீங்கிய பாடில்லை. அந்த நோய் இன்னும் அவரைப் பற்றி நிற்கிறது என்பதை அவரோடு உரையாடத் தொடங்கிய சில நிமிடங்களுக்குள்ளேயே நாம் உணர்ந்து கொள்ளமுடியும். இந்நிலையையும் அவரிடத்லே அடங்கியிருக்கும் எழுத்தாற்றலையும் ஒருசேர நோக்கி உன்னும் எவருக்கும் ஒருதரமேனும் ஓர் ஏக்கப் பொருமல் எழாமற் போகாது.

நாம் ஒன்று செய்யக் கடமைப்பட்டுள்ளோம். முருகானந்தனை இலக்கிய உலகு நினைவுகூர்தற்கு, என்றும் எண்ணி எண்ணிக் களிப்பதற்கு உரியமுயற்சி ஒன்று செய்தல் வேண்டும். அவர் வாழ் நாளிலேயே அவரது சிறந்த படைப்புக்கள் சிலவற்றையேனும் தொகுத்து நூல் வடிவு செய்து அதனையும், அதன் வருமானத்தையும் அவருக்குச் சமர்ப்பித்து அதனால் அவர் கொள்ளும் ஆத்ம திருப்தியைக் காண்பதே நாம் செய்யவேண்டிய செயலாகும். இஃது என்று நிகழுமோ அன்றே நாம் முருகானந்தனைக் கௌரவித்தவர்களாவோம். அவரது பெருமையை உணர்ந்தவர்களாவோம்.

அன்பளிப்பு

கல்வி போதனா நிலையம்
34, பலாலி வீதி
யாழ்ப்பாணம்

அன்பளிப்பு

நியூ லங்கா பாம்
இணுவில்

தி. ச. வரதராசன்

# புதுமைப் பித்தர்கள் சங்கம்

ஆறும் வகுப்பு மாணவனைப் பார்த்து உபாத்தியாயர் கேட்கிறார் :

"இரண்டாம் :வேற்றுமை உருபுகள் எவை?"

மாணவனுக்குத் தெரியவில்லை.

"நேற்றுத்தானே சொல்லித் தந்தேன்; அதற்குள் மறந்துவிட்டாயா?"

பதிலில்லை.

"நேற்றுக் காலையில் சாப்பிட்டாயா?" மாணவன் 'ஓம்' என்று தலையசைக்கிறான்.

"என்ன சாப்பிட்டாய்?"

"தோசை"

"சாப்பாட்டு விஷயத்திலெல்லாம் இவ்வளவு ஞாபகம் வைத்திருக்கிறாயே; படிப்பிலும் கொஞ்சம் ஞாபகம் வைத்தாலென்ன?"

எதை மறந்தாலும் சாப்பாட்டு விஷயங்கள் மட்டும் பொதுவாக எல்லாருக்குமே நினைவுக்கு வந்துவிடுகிறது.

என்னைப் பொறுத்தமட்டில் இந்த விஷயத்திற்கூட எனக்கு மறதி ஏற்பட்டுவிடுவதுண்டு. காலையில் என்ன சாப்பிட்டேன் என்பதைக்கூடச் சில சமயங்களில் நினைவுபடுத்த முடியாமலிருக்கிறது.

இந்த மாதிரியான மறதிக்காரனிடம் 'மறுமலர்ச்சிக்கால நினைவுகள்' பற்றி ஏதாவது எழுதும்படி கேட்டிருக்கிறார்கள்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முந்திய நினைவுகள் - என்னைப் பொறுத்தமட்டில் அவைகள் செத்து மடிந்து போனவைகள். அவைகளுக்கு, உயிர் கொடுக்கவேண்டும்!

நல்லவேளையாக நண்பர் இலக்கியச் செல்வர் செந்திநாதன் 'வெள்ளி'க்காக ஒரு கட்டுரை எழுதித் தந்தார். 'மறுமலர்ச்சிச் சங்கம் மலர்கிறது!' என்பது அதன் பெயர். அதைப் படித்தபோது சில நினைவுகள் லேசாகத் தெரிகின்றன.

அப்போது எனக்குப் பதினெட்டு வயதிருக்கலாம். அதற்கு இரண்டு மூன்று வருடங்கள் முன்பிருந்தே ஈழகேசரி இளைஞர் சங்கத்திற் சேர்ந்து, ஈழகேசரி கல்வி அனுபந்தத்தில் குட்டிக் கட்டுரைகள் எழுதி, பிறகு 'ஈழகேசரி'யிலும் சிறுகதைகள் எழுதிவிட்ட நிலைமை. ஈழகேசரியில் எனது கதைகளை வெளியிடத் துணிந்த திரு. சோ. சிவபாதசுந்தரம் எனக்கு எழுதிய ஒரு கடிதத்தில், புதுமைப்பித்தன் கதைகள் கு. ப. ராஜகோபாலன் கதைகள் ஆகியவற்றைப் படித்துப் பார்த்தால் நல்ல சிறுகதைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளலாமென்று எழுதியிருந்தார். இரண்டு பேரில் என்னை இலகுவாகக் கவர்ந்து விட்டவர் புதுமைப்பித்தன். அவருடைய இருபதுக்கு மேற்பட்ட கதைகள் அத்தனையும் எனக்கு மனப்பாடம் மாதிரி. அந்தக்கதைகளிலிருந்த புதுமைக் கருத்துக்களும், கம்பீரமான அவருடைய வசன நடையும் என்னை ஆட்கொண்டுவிட்டன.

அந்தச் சமயம் பார்த்து ஈழகேசரி இளைஞர் சங்கத்தின் மூலம் 'எழுத்தாளர்'களாகிவிட்ட அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, து. உருத்திரமூர்த்தி (மஹாகவி), கனக செந்திநாதன், நாவற்குழியூர் நடராசன் முதலிய சில நண்பர்களின் தொடர்பு எனக்கு எப்படியோ ஏற்பட்டிருந்தது.

எல்லோரும் சிறுவர்கள். எனக்கும் கொஞ்சம் துடிப்பு அதிகம். ஏதாவது செய்ய

வேண்டுமென்று எப்போது பார்த்தாலும் சிந்தித்துக்கொண்டே இருப்பேன். எனக்குத் தெரிந்த நண்பர்களை ஒன்றுசேர்த்து ஒரு 'சங்கம்' ஆரம்பித்தாலென்ன என்று யோசித்தேன். ஏதாவது ஒன்றைப்பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டால், இன்று போலவே அன்றும், அந்த ஒரு முடிவு காணும்வரை விடவே மாட்டேன்!

'சங்கம்' என்றால் ஐந்தாறு பேர்மட்டும் போதாதே! எனக்கு யாராவது ஆலோசனை சொன்னார்களா அல்லது நானாகவே செய்தேனோ நினைவில்லை. ஈழகேசரியில் என்னுடைய கருத்தை விளம்பர மூலமாக அறிவித்தேன்.

சங்கம் கூடும் தினத்துக்கு முன்பாகவே சங்கத்தின் பெயர், நடைமுறை எல்லாவற்றையும் பற்றி எனக்குள்ளே ஒரு திட்டம் இருந்தது. சங்கத்தின் பெயர்கூடப் புதுமையாக இருக்கவேண்டுமென்று கருதினேன்.

நான் வைத்திருந்த பெயர் என்ன தெரியுமா? "புதுமைப் பித்தர்கள் சங்கம்!"

என்னைப் பொறுத்தமட்டில் இன்றும் கூட இந்தப் பெயர் மிகவும் அழகாக, ஆழமான கருத்தோடு இருப்பதாகத் தோன்றுகிறது.

ஆனால், 30 வருடங்களுக்கு முன்னால், என்னுடைய நண்பர்களிற் பலர் 'பித்தர்கள்' என்ற இயக்கத்தில் தம்மை உறுப்பினராக்கிக் கொள்வதற்குத் துணியவில்லை! நான் எவ்வளவோ வாதாடித்தான் பார்த்தேன்; நடக்கவில்லை.

'புதுமைப் பித்தர்கள் சங்கம்' முளைக்காமலே அமுங்கிவிட, அந்த இடத்தில் தோன்றியதுதான் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்!'

இந்தத் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்தான் 'மறுமலர்ச்சி' என்று, இன்று பிரசித்தி பெற்றுவிட்ட சஞ்சிகையை நடாத்திற்று. மறுமலர்ச்சியின் இணை ஆசிரியர்களாக திரு. அ. செ. முருகானந்தனும் நானும் கடமையாற்றினோம். வெளியிடுபவராக நாவற்குழியூர் நடராசன் இருந்தார்.

ஆரவாரமாக, மிகுந்த ஆர்வத்தோடு ஆரம்பித்த 'மறுமலர்ச்சி' சுமார் ஒரு வருட காலம் மிகவும் கலகலப்பாக வெளிவந்து கொண்டிருந்தது. அதற்குப்பின் மேலும் சுமார் இரண்டு வருட காலத்தை என்னால் முடிந்தமட்டும் நான் கொண்டிழுத்தேன்.

அந்த மூன்று வருட காலத்துள் 'மறுமலர்ச்சி'யின் சுமார் இருபத்தைந்து இதழ்கள் மலர்ந்தன.

அந்த இருபத்தைந்து இதழ்களும் ஈழத்து மறுமலர்ச்சித் தமிழ் இலக்கியத்தின் அத்திவாரமாக அமைந்துவிட்டதை இப்போது உணர்கிறேன்.

அந்தக் காலத்தில் நாங்கள் 'வெறும்' இளைஞர்கள்தான். ஆனாலும், 'எத்தகைய ஒரு மகத்தான செயலைச் சாதித்திருக்கிறோம்!' என்று நினைத்துப் பார்ப்பதில் இப்போது ஒரு திருப்தி ஏற்படுகிறது!


*Visit*

**STM INDUSTRIES**

*Manufacturers of:*

Rubber Stamps, House Name Boards, Marble Stones, Engraving on Pens and all kinds of Metal, Kee Tags, Compliment Tags, School Badges and Parties Badges in various Colours & Designs, Cinema Slides, Wax Seals Etc.

1/3, Power House Road,
New Market View, JAFFNA

இலக்கியச்செல்வர்
**கனக. செந்திநாதன்**

# மறுமலர்ச்சிக் குழுவில் மணம்வீசும் மலர் அ. செ. முருகானந்தன்

முப்பது வருடங்களுக்கு முன் நடந்த ஓர் இலக்கியக் கூட்டம் என் நினைவில் மிதக்கிறது. 'புதுமைப் பித்தர்கள் சங்கம்' என்ற பெயரில் தி. ச. வரதராசன் அழைப்பின் பேரிற் கூடியது அந்தக் கூட்டம்.

13-6-43 ஆந் தேதி கூடிய அந்தக் கூட்டம் யாழ்ப்பாணம் செம்மாதெரு 45ஆம் இலக்கமுள்ள ஒரு வீட்டு விருந்தையில் கூடியது. பெரியதான அந்த வீட்டு விருந்தையைக் கூட்டம் நடாத்த உபகரித்தவர் ரேவதி குப்புசாமி என்ற தொழிலாள அன்பர்.

பதின்நான்குபேர் கூட்டத்துக்கு வந்திருந்தனர். அளவெட்டி, பொன்னாலை, கோப்பாய், நாவற்குழி, குரும்பசிட்டி ஆகிய கிராமங்களில் இருந்து வந்திருந்தனர். அதில் ஒரு சிலரை எனக்குத் தெரியும். ஈழகேசரி இளைஞர் சங்கத்தோடு தொடர்பு கொண்டு திரு. சோ. சிவபாதசுந்தரம் அவர்களின் அரவணைப்பில் எழுத்துத் துறையிற் புகுந்தவர்கள் அவர்கள். அவர்களில் ஒருவர்தான் அ. செ. முருகானந்தன். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பெற்றெடுத்த மும்மணிகளில் [அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, 'மகாகவி' உருத்திரமூர்த்தி] ஒருவர் அவர்.

ஆரம்பக் கூட்டம் என் தலைமையில் நடைபெற்றாலும் முதல் வருடத் தலைவராக அ. செ. முருகானந்தன் அவர்களே ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

'புதுமைப் பித்தர்கள் சங்கம்' என்ற பெயர் மாற்றப்பட்டுத் 'தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிச் சங்கம்' எனப் பெயர் சூட்டப்பட்டது. "யாழ்ப்பாணத்து இலக்கிய இளைஞர்களின் லக்ஷியக் கனவு ஒன்று நனவாயிற்று" என்ற பூரிப்பு எல்லோர் மனத்திலும் பொங்கி வழிந்தது. இளம் வயதிலேயே எழுத்துத் துறைக்கு வந்த முருகானந்தன் அப்போது ஈழகேசரிப் பத்திரிகையில் துணை ஆசிரியராகக் கடமையாற்றினர். அமைதியான சுபாவமுடைய அவர் மறுமலர்ச்சிச் சங்கத்தையும் ஆக்கபூர்வமான வழிகளிற் கொண்டு நடாத்தினர்.

1943—46 என்னும் ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற மறுமலர்ச்சிச் சங்கம் குறிப்பிடக்கூடிய சாதனைகளைச் செய்தது. 3-10-43இல் சுவாமி விபுலானந்தர் அவர்களை வரவேற்று அவரது அறிவுரைகளைக் கேட்டு மகிழ்ந்தது. 20-11-43இல் அளவெட்டியில் நாவலர் அவர்களுக்குப் பிரமாண்டமான முறையில் விழா எடுத்தது. நவசக்தி ஆசிரியர் சக்திதாசன் சுப்பிரமணியன் அவர்களை வரவேற்று ஈழகேசரிப் பொன்னையா தலைமையிற் குரும்பசிட்டியிலே சொற்பொழிவு செய்வித்தது. 8-4-44இல் கம்பர் திருநாளையும், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் தலைமையில் பாரதி விழாவையும் நல்ல முறையிற் கொண்டாடியது. இவைகளேயல்லாமற் சிறுகதைச் சிற்பியான கு. ப. ராஜகோபாலன் மறைவுக்கு அநுதாபக் கூட்டம் நடாத்தியதோடு அவர் குடும்ப நல நிதிக்காக 131 ரூபா சேர்த்தும் உதவியது. பாரதி மணி மண்டப நிதிக்கு 65 ரூபாவை அனுப்பிவைத்தது.

13-1-45இல் கையெழுத்தில் மறுமலர்ச்சி என்ற பத்திரிகையைத் தொடங்கி நடாத்தியதோடு 46ஆம் ஆண்டில் அச்சில் அதையே வெளியிடவும் செய்தது.

மறுமலர்ச்சிக் குழு வளரத் தொடங்கியது. அங்கத்தவர் பலர் வந்து சேர்ந்தனர். முருகானந்தன் அவர்கள் ஈழகேசரியில் மறுமலர்ச்சி வட்டாரத்து எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டார். அதே வேளையில் திருச்சியில் இருந்து வெளியாகிய 'கிராம ஊழியன்' பத்திரிகையும் எங்கள் எழுத்தாளர்களுக்குத் தகுந்த இடம் அளித்தது. எனவே, 1943—1946க்கு இடையில் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பல படைப்புக்களை எழுதிவரலாயினர்.

இவர்களில் தி. ச. வரதராசன், கனக செந்திநாதன், அ. செ. முருகானந்தன், அ. ந. கந்தசாமி, மகாகவி, நாவற்குழியூர் நடராசன், சு. வேலுப்பிள்ளை [சு. வே], க. இ. சரவணமுத்து, ச. பஞ்சாட்சரசர்மா என்போர் முக்கியமானவர்கள்.

இந்தக் குழுவிற் சிறுகதைத் துறையிலே தன் கைவண்ணத்தைக் காட்டியவர் அ. செ. முருகானந்தன் அவர்களாவர். யாழ்ப்பாணத்து நாட்டுப்புற வாழ்க்கையை மண்வாசனை கமழ அதற்கேற்ற நடையில் முதன் முதலில் எழுதிய பெருமை அவருடையது. அவர் அக்காலத்தில் வெகு வேகமாகச் சிறுகதைகளைப் படைத்தார். ஸ்ரீராமானுஜம், வெறுப்பும் வெற்றியும், ஒன்றில் முடியாதா? அம்பிகை சன்னதியில், தீபாவளிக் கனவு, பரம்பரைப் பலி, எச்சில்இலை வாழ்க்கை, ஏழை அழுத கண்ணீர், அடிமை, பரிசு, மனிதமாடு, விளம்பரவாழ்வு, கிழவி, விடியுமா? வியாபாரி யார்? வண்டிச்சவாரி, காமனும் ராமனும், பழையதும் புதியதும், பாடுபட்டுத்தேடி, மாடு சிரித்தது, காப்பிலி என்பவை அவர் எழுதிய கதைகளிற் சில.

மனித மலைகளை மாடுபோல இழுக்கும் எழுபத்தைந்து வயதுடைய ஏழை றிக்ஷாக் காரனைப் பற்றிய மனிதமாடு என்ற கதை அலையன்ஸ் கம்பெனியார் வெளியிட்ட கதைக் கோவையில் இடம்பெற்று அவர் புகழை உயர்த்தியுள்ளது. ஆனால் முருகானந்தனை நினைக்கும் போதெல்லாம் அவர் அக்காலத்தே எழுதியுள்ள வண்டிச்சவாரிதான் என நினைவில் மிதக்கிறது. கிராமப்புறத்து இறைப்பிலே தொடங்கி, வல்லிபுரக் கோவில் வண்டிற் சவாரியைத் தொட்டு, அதனால் ஏற்பட்ட வழக்கை ஓர் அழுத்தம் அழுத்தி, வெற்றிக்காகத் திருவிழாவோடு முடிகிறது. வண்டிச் சவாரி என்னும் இந்தக் கதை. ஒவ்வொரு அம்சமும் அளவோடு எழுதப்பட்டு மெருகிட்ட விக்கிரகம்போல் ஒளி வீசுகிறது. பரிசு, ஏழை அழுத கண்ணீர், காமனும் ராமனும் என்ற கதைகளும் நினைவில் நிற்கக்கூடியனவே.

அவர் சுதந்திரனில் எழுதிய நாவல் புகையில் தெரிந்த முகம். வண்டிச் சவாரியையும், திருவிழாவையும், ஏழையின் புகையிலைக் கன்றுத் தோட்டத்தையும், தேர்தலையும் மீண்டும் நினைவூட்டி இவை எல்லாவற்றையும் ஒருசேரப் பாருங்கள் என்று காட்டுவதுபோல கற்பனை செல்கிறது. காதற் கதையாக இது அமைந்திருக்கிறது. இந்த நாவல் நூலாக 1950ஆம் ஆண்டில் வெளிவந்திருக்கிறது. ஈழகேசரி, மறுமலர்ச்சி, சுதந்திரன், எரிமலை, வீரகேசரி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர் முருகானந்தன். யாத்திரை என்ற நாவலும் சில மொழிபெயர்ப்புக் கதைகளும் அவரால் எழுதப்பட்டிருக்கின்றன.

அவருடைய தொய்வு நோய் அவரைக் தொடர்ந்து எழுத விடுவதில்லை. எனவே சில ஆண்டுகள் அவரது எழுத்துக்களைக் காண முடியவில்லை. ஆனுல் வெள்ளி மல்லிகை என்ற தொடரில் ஈழநாட்டில் அவர் மீண்டும் எழுதினுர். பழைய கைவண்ணம் குன்ருமல் எழுதினுர். பழைய நினைவுகளை அவர் எழுதும் அழகு அருமையாகவே இருந்தது. மாவிட்டபுரம் என்ற ஊர்பற்றி எழுதும் போதுகூட இலக்கியச் சுவை சொட்டவே எழுதினுர் முருகானந்தன்.

முருகானந்தன் நல்ல சிறுகதை எழுத்தாளர். திறமையான கட்டுரையாளர். வெகு அடக்கமானவர். அவரது வறுமை நிலையைக் கண்டு பலர் இரக்கப்படுகின்றனர். ஆனுல் அவர் இரக்கப்படுபவரைக் கண்டு சிரித்துக் கொண்டிருக்கிருர்.

எதற்கும் ஒதுங்கும் சுபாவமுள்ள அவரை அம்பனைக் கலைப்பெருமன்றம் பெருமைப்படுத்துவது உண்மையில் மனமகிழ்ச்சிக்குரிய செயலாகும்.

**ஆ. சிவநேசச்செல்வன்,** பி.ஏ.[ஆனர்ஸ்]
தமிழ் விரிவுரையாளர்
யாழ்ப்பாணக் கல்லூரி

# அ. செ. மு. வின் சிந்தனையும் செயலும் மறுமலர்ச்சியே

ஈழத்துக் கலைஇலக்கியத் துறையிலே ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக ஈடுபட்டுத் துறைபோகிய நிலையிற் பல சாதனைகள் புரிந்தவர் **அ. செ. முருகானந்தன்.** இவர் தமது முக்கியத்துவத்துக்கேற்ற இலக்கிய மதிப்பீட்டையும், சிறப்பையும் பெற்றிருக்கிறார் என்று கூறவியலாது. 1921ஆம் ஆண்டிற் பிறந்த இவர் தமது 20ஆவது வயதுமுதல் இன்றுவரை எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கித் தமக்கென எழுத்துலகில் முக்கிய இடத்தைப் பெற்றுக்கொண்டார். இவரது இலக்கிய ஆக்கங்களின் பரப்பு விரிந்தது. **'புகையில் தெரிந்த முகம்'** என்ற குறுநாவலைத் தவிர மற்றும் சிறுகதைகளோ, நாவல்களோ, நாடகங்களோ, மொழிபெயர்ப்புக்களோ, கட்டுரைகளோ, நூலுருவில் வெளிவராமையினால் இவரது இலக்கிய ஆளுமையைப் பலரும் முழுமையாகப் புரிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படவில்லை.

இலக்கியக் கோட்பாடுகளின் ஒளியில் ஒருவரை மதிப்பீடு செய்யும்போது அவரது ஆக்கங்களையும், அதன் பின்னணியில் அமைந்த இயக்கச்சக்திகளையும், சமூகச் சூழலையும் சேர்த்தே நோக்கவேண்டும். இந்த வகையில் அ. செ. முருகானந்தன் சாதித்தவை, சாதிக்க முயன்றவை யாவும் முக்கியமாகின்றன.

'மறுமலர்ச்சி' என்ற பத்திரிகையையும் தமிழ் மறுமலர்ச்சிச் சங்கத்தையும் மட்டும் கொண்டு 'அ. செ. மு'வை நோக்கும் நிலைக்கு அப்பால் இவர்கள் சிந்தனை விரிவுக்குக் காரணமான தமிழ்நாட்டு எழுத்தாளர்களது வேகத்தையும் துடிப்பையும் இணைத்து அவதானித்தால் ஈழத்தில் ஏற்பட்ட 'மறுமலர்ச்சி இயக்கம்' அதன் அருட்டுணர்வில் தோன்றிய குழந்தைதான் என்று அமைதியடைவதுடன் சாதனைகளின் பின்னணியிற் பெருமையும் கொள்ளலாம். குறிப்பாக, **மணிக்கொடி, கிராம ஊழியன், கலாமோகினி** ஆகிய பத்திரிகைகளில் மறுமலர்ச்சி, மறுமலர்ச்சித் தமிழ் என்ற சிந்தனைகளும் சாதனைகளும் விரிந்து வியாபித்திருந்தன. புதுமை இலக்கியத்தைப் பரிச்சயம் செய்துகொள்ள விரும்பியவர்களுக்கும், எழுத்தாளர்கள் ஆகவேண்டும் என்ற ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கும் ஏற்பட்ட இலட்சியக் கனவுகள் மறுமலர்ச்சியாக அன்று முகிழ்த்தன. மறுமலர்ச்சியின் மூல சிந்தனைகள் பாரதியிலிருந்தே ஆரம்பித்தன. **கிராம ஊழியன்** முதலாவது இதழில், **திருலோகசீதாராம்,** ''தமிழ்நாட்டில் பாரதியை மூலபுருஷனாகக் கொண்ட மறுமலர்ச்சி துவங்கின இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு அதன் உன்னத யௌவனப் பருவத்தில், ஊழியன் தோன்றுகின்றான். பாரதி காட்டிய வழியைப் பணிவுடன் பின்பற்றித் தொண்டு செய்வதைச் சபதமாகக் கொண்டுவிட்டான்'' என்று கூறுகின்றார்.

மறுமலர்ச்சிச் சிந்தனைகள் புதுமைப் போக்குகளையே உயிர்நாடியாகக் கொண்டவை. ''இவை கீறல் விழுந்த இசைத் தட்டைப்போல் பழைய நொடிப் பாதையிலே சுற்றிச்சுற்றி வந்து செக்கடி

மாட்டுத்தனம் பண்ணுமல், சிந்தனைக்கு வளமும், அறிவுக்கு உணர்வும் ஊட்டித் தமிழுக்குவலிமைசேர்க்கின்றனவோஅவை மறுமலர்ச்சியாக விளங்கின.'' தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகச் சோதனைகளும், சாதனைகளும் புரிவதே மறுமலர்ச்சியாளர்களின் சிந்தனையும் செயலுமாக விளங்கின.

இச் சந்தர்ப்பத்தில் இவற்றையெல்லாம் விரிவாக நோக்க வாய்ப்பில்லை. எனினும், ஈழத்து மறுமலர்ச்சிக் காலத்துக்கு உந்தும் சக்தியானது சமகாலத் தமிழ்நாட்டுச் சிந்தனைகளிலிருந்து உருவாகியது என்பதை மட்டும் விளங்கிக் கொள்வது போதுமானது. இதே தொடர்பாக ஈழத்து இலக்கியச் சிந்தனைகள் சமூக பொருளாதார அரசியற் பின்னணியில் புதிய வடிவம்பெற ஆரம்பித்ததையும், இணையான வளர்ச்சிபெற ஆரம்பித்ததையும் அவதானிக்கவேண்டும். டொனமூர் அரசியல்திட்டம் எமது நாட்டிற் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியது. நாட்டில் தேசிய உணர்ச்சி ஓரளவு முளைவிட ஆரம்பித்த இக்காலத்திற் சேர். பொன்னம்பலம் இராமநாதனை ஆதர்ச புருஷராகக் கொண்டு தோன்றிய ஈழகேசரி, அரசியல் ஏடாகப் பின்னர் கலை இலக்கியப் பரிவர்த்தனைகளுக்கும் உரிய இடத்தை அளித்தது. காந்தீய சிந்தனைகளும், தமிழ்நாட்டு மறுமலர்ச்சிச் சிந்தனைகளும் புதிய வேகத்துடன் ஈழத்தையும் கவர்ந்திழுக்க ஆரம்பித்தன. இதே காலத்திற் படிப்படியாக இலக்கிய வேட்கை கொண்ட இளைஞர் பலருக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் பணியில் 'ஈழகேசரி' முன்னின்றது. சோ. சிவபாதசுந்தரம் போன்றோர் இம் முயற்சிக்குக் காரணகர்த்தர்களாக விளங்கினர். அ.செ.மு.வும்[1941இன் பின்] இக் குழுவில் ஒருவராகவிருந்தார். சுருங்கக் கூறின் ஆரம்பத்தில் ஈழத்து மறுமலர்ச்சி இயக்கத்துக்கு ஈழகேசரி விளைநிலமாக விளங்கியது; மறுமலர்ச்சிச் சங்கத்தினர் எழுத்துக்கள் பெருமளவு ஈழகேசரியை அணிசெய்தன; இந்த வேகமே பின்னர் மறுமலர்ச்சிச் சஞ்சிகையை [1945] உருவாக்கியது· பழைய ஈழகேசரி ஏடுகளின் அமைப்பையும், எழுதியவர்களையும், இலக்கிய சர்ச்சைகளையும் சிந்தனைகளையும் தொகுத்து நோக்கும்போது தமிழ் நாட்டு மறுமலர்ச்சி இயக்கம், காந்திய சிந்தனைகள், டொனமூர் அரசியல் திட்டம் ஆகியனவற்றின் தர்க்க ரீதியான விளைவே ஈழத்து மறுமலர்ச்சிச் சங்கம் எனலாம்.

'சுவாமி விபுலானந்தர்', இலங்கைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகப் பதவியேற்ற பின்னர் முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது 'மறுமலர்ச்சிச் சங்கத்தினர்' வரவேற்றுச் சிறப்புக்கூட்டம் நடாத்தினர். புதுமைச் சிந்தனைகளைக் கொண்ட சுவாமிகளின் கருத்து 'மறுமலர்ச்சிச் சங்கத்தினரைப்' பெரிதும் கவர்ந்திருந்தது. அவரின் சிறப்புரையைப் '**புதிய தமிழ் இலக்கியம்**' என்ற தலைப்பில் **அ. ந. கந்தசாமி** தொகுத்து 17-10-43 ஈழகேசரி இதழில் வெளியிட்டிருந்தார்.

''தமிழில் வெளிவரும் கதைகளில் அநேகம் இந்தியராலேயே எழுதப்படுகின்றன. அவை அந்நாட்டு வாழ்வினை நமக்குத் தெரிவிக்கின்றன. நம்மைப் போலவே இந்தியர்களும், ஈழத்து மக்களின் வாழ்வையும், வளங்களையும், அறிய விரும்புவர். எனவே, நமது வாழ்வை உள்ளபடிசித்திரிக்கும் உயர்ந்த கதைகளை மறுமலர்ச்சித் தொண்டர்கள் வெளிக்கொணர வேண்டும்.''

சுவாமிகளின் சிந்தனைகள் 'மறுமலர்ச்சிச்' சிந்தனையாளரின் இலட்சிய உணர்வுகளுக்குப் பெருமளவு ஆதர்சமாக விளங்கின. அ.செ.மு சுவாமிகளைச் சந்தித்து எழுதிய தமது பேட்டிக் கட்டுரையொன்றிலும் இதனைத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றுர்.

பொதுவாக அ. செ. மு.வைப்பற்றி எழுதியவர்களும், [அறிமுகம் செய்தவர்கள்] 'மறுமலர்ச்சிப் பணிகளை மதிப்பிட்டவர்களும் மேற்போக்காகவே அணுகியுள்ளார்கள். சிறுகதைகளிலுஞ்சரி, கட்டுரைகளிலுஞ்சரி அ. செ. மு.வின் சிந்தனைகள் புதிய சமுதாயத்தைக் காண

வேண்டும் என்ற அவாவிற் துடித்ததையே காண முடிகின்றது. தமக்கென முழுமை யான இலக்கியக் கோட்பாட்டை முன் வைத்துத் தம்மைச் சார்ந்தவரைக் கவர்ந்து துடிப்புடன் எழுதினர். காலத் தின் தேவைக்கேற்ப இயங்க முனைந்த முனைப்பு அவரது கருத்துக்களிற் பரவலா கத் தொனித்துள்ளது. ஈழகேசரியில் அவ் வப்போது எழுதிய கட்டுரைகளிலும், பின்னர், 'மறுமலர்ச்சி' இதழ்களில் எழு திய தலையங்கங்கள், கட்டுரைகள் ஆதியன வற்றிலும் இதனையே காணமுடிகின்றது. தமிழில் கதை இலக்கியம் என்ற கட்டுரை யில் உள்ள கருத்துக்கள் அ. செ. மு.வைப் புரிந்துகொள்ளப் போதுமானவை.

"...... தமிழிலுள்ள கதை இலக்கியத் தில் இப்போது காணப்படும் முக்கிய குறை இதுதான். அதாவது இலட்சியக் கதைகள், சீர்திருத்தக் கதைகள் மிகவும் குறைவு. அத்தியாவசியமாக வேண்டப் படுவனவும் அவைதாம். பொழுது போக்குக் கதைகள் போதுமென்றபடி ஏராளமாகச் சேர்ந்துவிட்டன. இனி அவற்றுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விட்டு எமது நாட்டை அப்படியே தூக்கிக் காட்டும் தேசத்தின் வறுமை, துன்பம், அரசியல் நிலைமை முதலிய வற்றை, உணர்ச்சியூட்டக்கூடிய முறை யில் மாற்றக்கூடிய முறையிற் சித்தரிக் கும் இலட்சியக் கதைகளைப் பெருக்க வேண்டும்."

[ஈழகேசரி - ஞாயிறு. 17-5-42]

இதே கட்டுரையில், வெறும் காதற் கதைகளை எழுதிக் கற்பனை உலகில் மிதந் தவர்களையும் கண்டித்துள்ளார். தமிழ் நாட்டு எழுத்தாளர்களை, ஆழமாகவும் நுணுகியும் படித்து வந்த இவர், தெளி வான இலக்கியச் சிந்தனைகளைக் கொண்டவ ராகவே இயங்கியுள்ளார். "தமிழில் தற்போது வெளியாகிக்கொண்டிருக்கும் அநேக கதைகளைப் பார்த்தால் 'தமிழ் நாட்டில் உள்ளவர்கள் எல்லோரும் காத லர்கள்; அவர்கள் காதலித்து ஏமாற்றமும் துயரமுமடைந்து இறந்து போவதைத் தவிர வேறு தொழில் அவர்களுக்கு இல்லை' என்றுதான் விளங்குகின்றது" என்று ஏக் கத்துடன் எழுதியுள்ளார். 11-7-43இல் மறுமலர்ச்சிச் சங்கப் பொதுக்கூட்டம் யாழ்ப்பாணத்திலே நடைபெற்றது. அ. செ. மு. வின் தலைமையில் நடை பெற்ற இக் கூட்டம்பற்றிய செய்தி 18-7-43 ஈழகேசரியில் வெளியாகியுள்ளது. மறுமலர்ச்சிச் சங்கத்தின் நோக்கத்தை அ. செ. மு. தெளிவாக அக் கூட்டத்திலே தெரிவித்திருந்தார்.

"மேடும் பள்ளமும் நிறைந்த கல்லொ ழுங்கையாக உள்ள தமிழிலக்கியத்துக் குக் காரைபோட்டுத் தார் ஊற்றி ஒப்புரவு படுத்தி அங்கிருந்து புதிய தெருக்களை நவீன முறையில் அமைக்க வேண்டும். அதுவே தமிழிலக்கிய மறு மலர்ச்சிச் சங்கத்தின் நோக்கம்."

அதே 'ஈழகேசரி' இதழில் [18-7-43] மறுமலர்ச்சித் தமிழ் என்ற அவரது பேச்சு முழுமையாக வெளியாகியிருக்கிறது, நீண்டகால இடைவெளியின்பின் மறு மலர்ச்சித் தமிழே தமிழிலக்கியத்திற் புது மையை ஏற்படுத்துகின்றது என்பதைத் தெளிவாகக் கூறியுள்ளார். "பலநூறு ஆண்டுகளுக்கு முன்னர் எப்பொழுதோ ஒரு முறைபூவும்காயுமாகப்புஷ்பித்திருந்த தற்கு மறுபடியும் இப்பொழுது மிகச் சமீப காலத்திற்தான் சிறிது துளிர்க்க ஆரம்பித் திருக்கின்றது. சீவன் குன்றிப் பசுமை வரண்டு காய்ந்து வெறும் தடிகளாய் நின்ற மரத்துக்குத் தண்ணீரும் பசளை யும் போட்டு அதை உயிர்க்கச் செய்த புண்ணியம் காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியைச் சேரவேண்டியதுதான். அன்று பாரதியிட்ட பசளையில்தான் இன்று 'மறுமலர்ச்சித் தமிழ்' வளர்ந்து பெருகின்றது. அன்று துளிர்க்க ஆரம்பித் தவைதான் இன்று பசுமை சொட்டும் இலைகளாகவும் அரும்புகளாகவும் மலர் களாகவும் வளர்ச்சி பெற்றுள்ளன." தமக்கேயுரிய பாணியில் மேற்போந்த வாசகங்களை எழுதியுள்ள அ.செ.மு. தமிழி லக்கியப் பாதையிலே மாற்றம் வேண் டும் என்பதை மனதார உணர்ந்து செய

லாற்றினார். புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றவேண்டும் என்ற அவா அவருடைய பல கட்டுரைகளிலும் தொனிக்கின்றது. பண்டித மனோபாவத்தோடு புதுமையை வெறுத்தவர்களைக் கண்டித்துள்ளார். தனித்தமிழ் இயக்கத்திற்கு எதிராக இயங்கினார். 'மனிதனுக்காகவே பாஷை' என்ற உணர்வோடு 'மண்வாசனை' தவழ எழுதினார். ''மனிதன் என்றால் ஒரு சில பண்டிதர்கள் மாத்திரமல்ல, தமிழ்ப் பாஷை பேசுபவர்கள் எல்லோரும் மனிதர்தான். தமிழன்தான். அவனுக்குத் தமிழில் உரிமையுண்டு. படித்த பண்டிதனுக்குத் தமிழில் எவ்வளவு உரிமையுண்டோ அவ்வளவு உரிமை சாதாரண தோட்டக்காரனுக்கும் உண்டு. இதை எவரும் மறுக்க முடியாது. திருக்குறளும் தொல்காப்பியமும் மட்டும் தான் தமிழல்ல. ஐந்து வயசுக் குழந்தை பேசும் மழலைச் சொற்களும் தமிழ்தான்' தனித் தமிழ் வெறியர்கள் மொழியின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுவார்கள். திசைச் சொற்கள் தமிழில் வருவதைத் தடுக்கமுடியாது.'' என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்த முற்பட்டார். தமது சிறுகதைகளில் யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கைக் கையாண்டு பெற்ற வெற்றி இந்த நம்பிக்கையில் ஏற்பட்டதேயாகும். ''தொல்காப்பியர் காலத்தில் இல்லாத 'சைக்கிள்' இன்றைக்கிருக்கிறது. அதற்குத் தமிழ் இல்லை; நிகண்டுகளில் சொல்லிவைக்கவில்லை. ஆனால், பொது சனங்களிடையே என்ன வகையில் அது சுகமாகவும் சாதாரணமாகவும் உபயோகப்படுகிறது. 'சைக்கிள்' என்றுதான். ஆகவே, சைக்கிள்தான் சரியான தமிழ். இலக்கியத் தமிழ்.'' [1943 - ஈழகேசரி] அ. செ. மு. வின் இக் கருத்துகளுக்கு எதிராக அக்காலத்தில் இயங்கிய பண்டித வர்க்க மனோபாவத்துக்கும் சிந்தனைக்கும் உதாரணமாகப் பண்டிதர் சிவசம்பு என்பவர் வானொலிப் பேச்சாகவும் பின்னர் கட்டுரையாகவும் வெளியிட்ட ஒரு கருத்தை உதாரணமாகக் காட்டலாம்.

''இப்பொழுது மறுமலர்ச்சி பெற்ற காரணத்தை வைத்துக்கொண்டு தமிழ் நடையை மிகவும் கீழ்த்தரமான நிலைக்குக் கொண்டுவரப் பலர் தெண்டிக்கிறார்கள். அவர்கள் 'நன்னாயிருக்கே யோக்கியதை;' 'என் முந்தியைப் பிடித்து இழுக்கிறேனே;' 'நான் கத்தப்போறேன்' என்று எழுதுகிறார்கள். இது தாமத குணத்தால் ஏற்பட்ட தவறு என்று கூறுவதல்லர்து மறுமலர்ச்சித் தமிழுக்கு அழகு செய்கிறது என்று கூறமுடியாது. அவர்கள் பேச்சுநடையை எழுத்தில் கொண்டுவரவேண்டும் என்று நியாயமும் சொல்வார்கள். பேச்சு நடை எல்லாருக்கும் பொதுவாயிருக்க முடியாது. 'நன்னாயிருக்கே' என்றதை, 'நன்றாயிருக்கே' என்றும், நன்றாயிருக்கும் என்றும் பலர் பேசுவார்கள். அதை நன்றாயிருக்கிறது என்று எழுத வேண்டியது எழுத்தாளனுடைய கடமை.''

[ஈழகேசரி - 28 - 11 - 43 பக்.3]

அக்காலத்திலேயே உருவாகியிருந்த இவ்விரு மனோபாவங்கள் கொண்டவர்களுக்கும் 'ஈழகேசரி' களமாக விளங்கியது. மறுமலர்ச்சித் தமிழின் வேகத்திற்கு முன்னையது ஈடுகொடுக்கமுடியவில்லை. பலர் மத்தியில் ஏற்பட்ட வாதப்பிரதிவாதங்களும், கருத்து மோர்தல்களும் சமுதாயத்தில் அக்காலத்தில் ஏற்பட்ட சிந்தனைக் கிளறல்களையே காட்டுகின்றன. இதே விதமர்ன கருத்துவாதங்கள் 1960ஆம் ஆண்டுவரையில் மீண்டும் முற்போக்கு, பிற்போக்கு, நற்போக்கு என உருவாகி அதன் தொடர்பாக 'இழிசனர் வழக்கு,' செந்தமிழ் வழக்கு என்ற கோஷங்கள் எழுந்த நிலையையும் ஒப்பிட்டு அவதானிக்கலாம். இக் கருத்துலகப் பிரச்சினை மறுமலர்ச்சிக் காலத்திலும் நிலவியது. இதைச் சார்ந்த அ. செ. மு. வின் கருத்துக்கள் அவரது ஆளுமையை உணர அவசியமாகும். 'எனது பத்திரிகை வாழ்க்கையில் அறுநூற்றுக்கு மேற்பட்ட கதைகள் என் கையினூடாக வெளிவந்துள்ளன.' என்று பெருமையோடு கூறும் அ. செ. மு. அன்று தொட்டு இன்றுவரை எழுதிய நூற்றிஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளிற் கையாண்டுள்ள பிரச்சினைகள், சீர்திருத்தங்கள், சிந்தனைகள், மண்வாசனை வீசும்

நடை யாவும் தொகுத்து ஆராயப்படும் போதுதான் நிச்சயம் அவரை உணர முடியும். வகைமாதிரிக்காகச் சில சிறு கதைகளையேனும் உதாரணம் காட்ட இச் சிறு கட்டுரையில் வாய்ப்பில்லை. ஒன்று மட்டும் கூறலாம். 'முற்போக்கு இலக்கியத்தின் மூத்தபிள்ளை' எனக் கலாநிதி கைலாசபதி சிறப்பித்துள்ள அ. ந. கந்தசாமியின் வேகம் அ. செ. மு. விடம் இல்லை. அதே நேரத்திற் புரட்சிகரமான சிந்தனையோடு 'கட்டறுத்த புரொமித்தியஸ்' ஆக இயங்கிய அ. ந. க. போல இயங்குவதற்கும் அ. செ. மு. விற்கு இருந்த வாய்ப்பும் வசதியும் இடமளிக்கவில்லை. சாதாரண கிராமத்தில் இருந்து மறுமலர்ச்சி இயக்கத்தோடு இணைந்த அ. ந. க., மஹாகவி, அ. செ. மு. ஆகிய மூவரும் எளிமை, மண் வாசனை, புதுமை, சிந்தனைத்திறன் ஆகிய யாவும் கொண்ட இலக்கியப்பணியால் தமிழ் இலக்கியத்தை அணிசெய்துள்ளனர். குறிப்பாக இவர்கள் வெவ்வேறு சூழலில் இயங்கியிருப்பினும் மறுமலர்ச்சியின் குழந்தைகள்தான். ஈழம் நிச்சயம் இவர்களாற் பெருமைப்படலாம். 'மகாஜனு எழுத்துலகுக்கு அளித்த மும்மணிகள்' எனக் கனக. செந்திநாதன் தமது ஈழத்துப் பேனுமன்னர் வரிசை அறிமுகத்திற் கூறியுள்ளார்கள். இவர்களுள் இன்று எம்மத்தியில் வாழ்பவர் அ. செ. மு. அவர்களே. மறுமலர்ச்சிக் குழுவில் இவர் ஒருவர்தான் எழுத்தையே தனது ஜீவனோபாயத்திற்குக் கருவியாகக்கொண்டு இயங்குபவர். பொருளாதாரச்சிக்கலின் மத்தியில் இயங்கிய அ. செ. மு. வேறு எந்தத் தொழிலையும் சாராமல் இன்றுவரை எழுத்துத் துறைக்காகவே உழைத்து எழுத்தாளராகவே விளங்குகின்றார். இன்றும் எழுதிக் கொண்டேயிருக்கிறார். பல்வேறு சமூக அரசியற் சக்திகளாற் காலத்துக்குக்காலம் ஈர்ப்புற்றதும் இதனாலேயே. சுருங்கக் கூறின் அ. செ. மு. வின் எழுத்துக்களில் நாம் காணும் சமுதாயம், அவர் காண அவாவிய சமுதாயம் புதுமைச் சமுதாயமே. மேலெழுந்தவாரியான ஆய்வினால் இதனை விளக்கமுடியாதது. அ. செ. மு. வின் சிந்தனையும் செயலும் மறுமலர்ச்சியே; புதுமையே.

அ. செ. மு. வின் எழுத்துக்களைக்காலத்தின் ஒளியில் முழுமையாக மதிப்பீடு செய்யும் நாள் உருவாகுமா? வறுமையின் பிடியில் இன்று வாழும் அவருக்குக் கலாச் சாரப் பேரவை கடந்த ஆண்டு உரிய மதிப்பை அளித்தது. இவ்வாண்டு கலைப் பெருமன்றம் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கிக் கௌரவம் அளிக்கிறது. அவரின் எழுத்துகளை வெளிக் கொணரத் தமிழ்கூறும் நல்லுலகம் ஆவன செய்யவேண்டும்.

'' தமிழ் இலக்கியம் எப்படி முன்னேற முடியும். ஆனால் முன்னேறத்தான் வேண்டும். இலக்கிய இரசிகர்களிற் பெரும்பாலோர் உணர்ந்துவிட்டனர். அது மட்டுமல்ல. விழிப்புற்றும் வருகிறார்கள். பத்திரிகைப் போக்கையும் புத்தக உலக மலர்ச்சியையும் கவனிக்கும் உண்மையான இரசிகர்கள், மேல்நாடுகளின் இலக்கியத்தில் நிகழும் துரித வளர்ச்சியைக் கண்டு பிரமிப்பவர்கள்; அவற்றுடன் போட்டியிட்டு தாங்களும் முன்னேறத் துடிக்கிறார்கள். இந்தத் துடிப்பு புதுமலர்ச்சியுடன் திகழும் தமிழுக்கு, இன்னும் சோபை அளிக்கக்கூடியது என்பதிற் சந்தேகமில்லை.''

—வல்லிக்கண்ணன்
கிராம ஊழியன்
*16-12-45 [பக். 53]*

**சி. தில்லைநாதன்**, M. A., M. Lit.
தமிழ் விரிவுரையாளர்
இலங்கைப் பல்கலைக் கழகம்
பேராதனை வளாகம்

# மறுமலர்ச்சி எழுத்தாளர்

தமிழின் மறுமலர்ச்சி என்ற தமது நூலிலே பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை கூறியுள்ள மூன்று விடயங்கள் இங்கு ஊன்றி நோக்கத்தக்கவை.

ஒன்று, சுமார் நூறு வருஷங்களுக்குமுன் வரை, அசைவின்றிக் கட்டுக்கிடையாய் நின்ற தமிழும் அறிவும் புத்துயிர் பெற்றுப் புதிய நெறிகளிற் செல்வதற்கான தூண்டுதல் கிடைத்தது, ஆங்கிலேயரது கூட்டுறவினால் என்பது.

இரண்டு, ஆங்கிலேயர் எமது எஜமானர்களாகவும் நாம் அவர்களது அடிமைகளாகவும் ஆகியது, எமது அறிவினையும் கலைப் பண்பாட்டினையும் போலியானவையாக்கிற்று என்பது.

மூன்று, அடிமைத்தனம் ஒழிந்தாலன்றி எமக்கு உய்தியில்லை என்பது. தெளிவாகிய உணர்ச்சியின் விளைவாகத் தேசியக் கிளர்ச்சி தோன்றி, ராஜபக்தி, தெய்வபக்தி, குருபக்தி முதலியனவெல்லாம் தேசபக்தியில் அடங்கி விட்டன என்பது.

தற்கால உலகிலே தலைமை பெற்றுள்ள பல சிந்தனைகளையும் சாதனங்களையும் நிறுவனங்களையும் நமக்கு அறிமுகப்படுத்தியவர்கள் சிறப்பாக ஆங்கிலேயர்களே. வெகுஜனக் கல்வியும் வெகுஜன வசதிகளும் வெகுஜன மொழியும் வெகுஜன இலக்கியங்களும் இங்கு உருவாக அவர்கள் உறவு தூண்டுதலளித்தது.

Renaissance பற்றி ஆங்கிலத்தின் மூலம் அறிந்தவர்கள் அந்த அர்த்தம் விளங்கத் தமிழில் வழங்கிய சொல்லே மறுமலர்ச்சி என்பதாகும். அது ஐரோப்பாவில் நிலமானிய முறை வீழ்ச்சியுற்று ஆரம்பப் பூர்சுவா சமூகம் அமைந்த பதினைந்காம் நூற்றுண்டுக்கும், பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் நிகழ்ந்த மாற்றங்களைக் குறிப்பதாகும். இறைமைவாதம் அங்கீகாரம் பெற்றதாயிருந்த இக்காலப் பகுதியிலே மானிடவாதத்தினதும், மனித பரிணமக் கோட்பாட்டினதும், வேறு பல முக்கிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களினதும் தாக்கங்கள் குறிப்பிடத்தக்களவு அமைந்தன. இவற்றின் விளைவாக உலகத்தையும் வாழ்வையும் பற்றிய பொருள் முதல்வாதரீதியான விளக்கம் ஏற்றமிக்க இடம் பெறுவதாயிற்று. மனிதன் கடவுளாற் படைக்கப்பட்டவன் என்று கருதப்பட்ட காலத்திலே மனிதருட் பெரும்பாலோர் பெற்றிருக்காதளவு பெருமையும், தன்னம்பிக்கையும், சமூக சமத்துவ உணர்வும் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று கருதப்பட்ட காலத்திலே தோன்றின.

அடிமைமுறை அகன்று தாராண்மைக் கருத்துக்களும் தனிமனித சுதந்திரம் பற்றிய சிந்தனைகளும் வளர்ந்த இக்காலத்திலே ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் வகையிற் பல முற்போக்கான சமூகச் சட்டங்கள் ஆக்கப்பட்டன.

ஆங்கிலேயர் தொடர்பால் இவை சம்பந்தப்பட்ட கருத்துக்கள் இந்தியா, இலங்கை போன்ற தேசங்களிலும் பரவலாயின. மத்தியகால நிலையிலிருந்து தற்கால நிலைக்கான மாறுதல்கள் நிகழக் காரணமான இச் சிந்தனைகள் கீழைத் தேசங்களில் ஒருவகையான குழப்பநிலைக்கும் காரணமாயினவெனலாம். நிலமான்ய காலத்துக்குரிய பழக்க

வழக்கங்களும் ஒழுக்க ஆசாரங்களும் தற்காலத்திற்குரிய சிந்தனைகளோடும் பழக்க வழக்கங்களோடும் முட்டி மோதிக்கொண்டன. பல மாறுதல்களைக் கொண்டுவந்த அந்நிய ஆட்சியினர் உள்நாட்டு வாழ்க்கை முறைகளையும் நாகரிகத்தையும் பரிவோடு நோக்கத் தவறியமையும் அவற்றைச் செவ்வனே உணராதிருந்தமையும் தனித்துவமும், தெளிவும் வாய்ந்த ஒரு வாழ்க்கைமுறை தோன்றுவதிற் பல பிரச்சினைகளைத் தோற்றுவித்தன.

இந் நிலையில், எமது சுதேசிய வாழ்வைச் சீர்திருத்திப் பலமாக்கும் முயற்சிகளும் தற்காலத்துக்கேற்ற முன்னேற்றம் காணும் வேட்கையும் முக்கியத்துவம் பெற்றன. எங்கள் குறைகளையும் பின்தங்கிய நிலையினையும் நாம் உணரத் தலைப்பட்டோம். மறுமலர்ச்சி பற்றிய சிந்தனைகள் எமது வாழ்வைப் புனரமைப்புச் செய்துகொள்ளும் தன்னுணர்வினைத் தோற்றுவித்தன. ஆங்கில வாழ்க்கை முறைகளையும் நாகரிகத்தையும் சிலர் கண்மூடிப் பிரதி பண்ணினராயினும், நமது பாரம்பரியத்தையும் பண்பாட்டுக் கலைமரபுகளையும் சீராக்கிப் பேணி வளர்க்கும் அதே வேளையில் மேற்கிலிருந்து வந்த புதிய சிந்தனையூற்றுக்களின் மூலமாகவும் நலம் பெறலாமென்று காட்டியவர்களே காலத்துக்கேற்ற மறுமலர்ச்சித் தலைவர்களாக மதிக்கப்படலாயினர்.

அரசியல், தேசிய, கலை, இலக்கிய மறுமலர்ச்சி இயக்கங்களுக்கு முன்னோடியாக இந்தியாவிலும்சரி, இலங்கையிலும்சரி, சமய மறுமலர்ச்சி இயக்கங்களே அமைந்தன. மேலை நாட்டிலிருந்து இறக்குமதியான மத வளர்ச்சிக்கு எமது சங்கங்களைப் பலி கொடுக்காது, பதிலாக அவற்றைக் காலத்துக்கேற்ற வகையிற் சீராக்கி வளர்த்து எமது ஆத்மீக அடித்தளத்தைப் பலமாக்கிக்கொள்ளச் சமயத் தலைவர்கள் உழைத்தனர்.

இதே வேளையிலே தனிமனித சுதந்திரமும், நாட்டு விடுதலை பற்றிய புத்துணர்வுகளும் மெல்ல மெல்ல வளரலாயின. மனித விடுதலையும் சிந்தனைச் சுதந்திரமும் பற்றிய எண்ணங்கள் பழைய சமூக சம்பிரதாயங்களை மீறிய சமூகச் சூழல், கலையிலக்கிய வளர்ச்சிக்கும் வாய்ப்பானதொன்றாயிற்று. அதற்கு உறுதியளித்த மத்தியதர வர்க்கத்தின் வளர்ச்சி புதிய கலை இலக்கியப் பரிசோதனைகளுக்கும் களம் அமைத்தது.

மானிடப் பார்வையும், சமத்துவ நோக்கும் ஓங்கப் பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகவும், பெண் விடுதலைக்காகவும் புதிய பரம்பரையினர் குரலெழுப்பினர். மனித குலம் ஏற்றத் தாழ்வுகளும் கட்டுப்பாடுகளும் நீங்கியதாய் ஆத்மீக பலத்தோடும் உலக வாழ்க்கை வசதிகளோடும் திகழவேண்டும் என்று மறுமலர்ச்சித் தலைவர்கள் எண்ணத் தலைப்பட்டனர். தற்கால இந்திய மறுமலர்ச்சித் தந்தை எனப் போற்றப்படும் ராம்மோகன் ராய் (1774 — 1833) பின்வருமாறு கூறுவது இங்கு கவனிக்கத் தக்கது: "பல்வேறு இனங்களையும் குலங்களையும் கிளைகளாகக் கொண்ட ஒரு மாபெரும் குடும்பமே மனிதகுல முழுமையும் என்ற முடிவுக்கே சமயம் மட்டுமன்றிக் காய்தலுவத்தலற்ற பொது அறிவும், விஞ்ஞான ஆய்வுகளின் சரியான அனுமானங்களும் இட்டுச் செல்லுமென்பது இப்போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆகவே, முழு இனத்திற்கும் பரஸ்பர மேன்மையும் மகிழ்ச்சியும் அளிப்பதற்காக, இயன்றளவுக்குத் தடைகள் யாவற்றையும் அகற்றி மனித இணைவுறவுக்கு ஒவ்வொரு வகையிலும் உற்சாகமும் வாய்ப்புமளிக்க எல்லா நாடுகளினதும் விழிப்புற்ற மனிதர்கள் விரும்புகின்றார்கள்.

இத்தகைய ஒரு விழிப்பு ஏற்படவும், அடிமைநிலை அகலவேண்டுமென்ற எண்ணமும் தேசிய உணர்ச்சியும் வளரவும் நேர்முகமாகவும் மறைமுகமாகவும் தூண்டுதலளித்தது ஆங்கிலேயருடன் நாம் கொண்ட உறவாகும். இந்த உறவின் விளைவாகப் பெற்ற மறுமலர்ச்சிக் கருத்துக்களின் தாக்கத்தைத் தமிழிலக்கியத்திலும் கண்டு தெளியலாம். தொகுத்துச் சொன்னால் எமது சமயத்தையும் வாழ்வையும் சீர்திருத்திப் பலப்படுத்தவேண்டும், நாடும் மக்களும் விடுதலை பெற்று ஏற்றத்தாழ்வகன்று சர்வதேசச் சமத்துவம் பெற்றுத் திகழவேண்டும் என்ற கருத்துக்கள் ஒரு கால இலக்கியங்களில் மிகுந்த அழுத்தம் பெறுவதனை இந்த மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் பரப்பும் சாதனங்களாக இலக்

கியங்கள் பயன்படுத்தப்படுவதனை அவதானிக்கலாம்.

இந்தியாவில் 1920க்கும் 1924க்கும் இடைப்பட்ட காலத்தில் காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் வெகுஜன இயக்கமாக வலுப்பெற்றதை ஒட்டியும் தொடர்ந்தும் தோன்றிய நவசக்தி (1920), ஆனந்த விகடன் (1926), மணிக்கொடி (1933), தினமணி (1934), கல்கி (1941) ஆகிய இதழ்களில் இந்தியா விடுதலை பெறும்வரை வெளிவந்த புனை கதைகளிலும் கட்டுரைகளிலும் மறுமலர்ச்சிக் கருத்துக்களைப் பெருமளவிற் காணமுடியும். 1943இல் தமிழிசைக்கு மறுமலர்ச்சி தரத் தமிழிசைச் சங்கம் நிறுவப்பட்டதும் மறுமலர்ச்சிக் கருத்துகளைத் தமிழ்மக்களிடையே பரப்பிய திரு. வி. கலியாணசுந்தர முதலியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, தமிழகம் முழுவதும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கவை.

மறுமலர்ச்சிக் கருத்துக்களும் முயற்சிகளும் இலங்கைத் தமிழரைப் பிணிக்க இந்தியத் தலைவர்களும் இயக்கங்களுமே முக்கிய காரணிகளெனலாம். இந்திய அரசியல், இலக்கிய மறுமலர்ச்சிக்குப் பல வழிகளிற் காலாயிருந்த காந்தியும் தாகூரும் முறையே 1921இலும் 1934இலும் செய்த இலங்கை விஜயங்களும் அவ் விஜயங்களின்போது ஆற்றிய சொற்பொழிவுகளும் முக்கியமானவை. அவற்றின் தாக்கங்களையும் மறுமலர்ச்சிக் கருத்துக்களையும் 1930 முதல் வெளிவந்த ஈழகேசரியிலும் 1931 முதல் வெளிவந்த வீரகேசரியிலும் காணவியலும். 1938இல் யாழ்ப்பாணத்தில் வித்துவ சிரோமணி சி. கணேசையரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு அன்னாருக்குப் பொற்கிழி வழங்கப்பட்டமை இலங்கைத் தமிழரிடையே ஏற்பட்ட தமிழ் மறுமலர்ச்சியுணர்வினைக் காட்டுவதாகும்.

இக்காலப் பகுதியில் மறுமலர்ச்சி என்ற சொல்லும் அடிக்கடி வழங்கப்பட்டது. மறுமலர்ச்சி இலக்கியத்தின் வெள்ளி முளைப்பு என்று அறிவித்துக்கொண்டு தொடங்கியது மணிக்கொடி. மறுமலர்ச்சி இலக்கியத்துக்கென்று தொடங்கியது கலாமோகினி. இலங்கையில் 1945இலே மறுமலர்ச்சி என்ற பெயரில் ஓர் இதழ் தொடக்கப்பட்டது. இவ்விதழைத் தொடக்கி நடாத்திய வட்டத்தினரையே இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே மறுமலர்ச்சி எழுத்தாளர் என்று சிறப்பாகக் குறிப்பிடுவர்.

அ. செ. முருகானந்தன், தி.ச.வரதராசன், சு. வே., அ. ந. கந்தசாமி, வ. அ. இராசரத்தினம், கனக. செந்திநாதன், சொக்கன், நாவற்குழி நடராசன், மஹாகவி, ஆகியோரையுள்ளடக்கிய இம் மறுமலர்ச்சி எழுத்தாளர் இலட்சிய வேகம் மிக்கவர்களாகவும் மறுமலர்ச்சி காணவேண்டுமென்ற பிரக்ஞை மிக்கவர்களாகவும் காணப்பட்டனர். இவர்களது எழுத்துக்களை மேலோட்டமாக நோக்கும்போது, இவர்கள் தம்மைச் சுற்றியுள்ள மக்கள்மீதும் அவர்களது வாழ்விலும் வரலாற்றிலும் கவனம் செலுத்தினர்கள் என்பதும், அம் மக்களுடைய பழைய நம்பிக்கைகள் சிலவற்றைப் புனராலோசனைக்கு எடுத்துக்கொண்டார்கள் என்பதும், அம்மக்கள் வாழ்வு ஏற்றத்தாழ்வகன்று அழகுபெற்றுப் பலம் பெற்று உயரவேண்டுமென்று விரும்பினர்கள் என்பதும், மனிதாபிமானமும் மனிதநல வேட்கையும் கொண்டிருந்தார்கள் என்பதும் புதிய இலக்கிய வடிவங்களையும் பரிசோதனைகளையும் கையாண்டனர் என்பதும் தெளிவாகும். சுருங்கக் கூறுவதெனில், தமிழின் கட்டுக்கிடையாய்க் கிடந்த தேக்க நிலையையும் எம் மக்களின் அடிமை நிலையையும் அறிந்த மறுமலர்ச்சி வேட்கையும் விடுதலை விருப்பும் கொண்ட இவ்வெழுத்தாளர் நாம் பிறந்து வளர்ந்த மண்ணினைத் தனித்துவம் சிதையாது சீர்படுத்துவதோடு அதற்கு மேற்கிலே தோற்றிய புதிய சிந்தனை ஊற்றுக்களினின்றும் நீர் கொணர்ந்து பாய்ச்சி வளம்படுத்தவும் விழைந்தனர் எனலாம்.

கலாநிதி க. கைலாசபதி
இலங்கைப் பல்கலைக் கழகம்
கொழும்பு வளாகம்

# சிறு சஞ்சிகைகள் வரிசையில் 'மறுமலர்ச்சி'

> "ஒவ்வொரு காலகட்டத்திலும் தனித்தனி முயற்சிகள் தலைதூக்கி, லட்சிய வேகத்தோடு வாழ முயன்று, வளர்வதற்குப் போரா்டி, அந்தப் போராட்டத்திலேயே உயிர்துறந்த பத்திரிகைகள் தமது ஆற்றலுக்கு மீறிய சாதனைகளை வெற்றியோடு நிறைவேற்றி இருக்கின்றன என்பதை, பின் என்றோ ஒருநாள் 'எடைபோட' முயல்கிற விருப்பு வெறுப்பற்ற விமர்சகர்கள் உணரமுடியும்."

[வல்லிக்கண்ணன், 'கிராம ஊழியனில் நான்', கலைச்செல்வி, தை, *1963*.]

கடந்த காலத்தைப் பின்னோக்கிப் பார்த்து ஒருவகையான சுய்திருப்தியுடனும் கழிவிரக்கத்துடனும் மேற்கண்டவாறு வல்லிக்கண்ணன் எழுதியுள்ளார் என்பது வெளிப்படை. அண்மையில் பி. எஸ். ராமையா, வல்லிக்கண்ணன் ஆகிய இருவரும் முறையே 'மணிக்கொடி காலம்', 'சரஸ்வதி காலம்' என்ற இரு கட்டுரைத் தொடர்களைத் தீபம் மாசிகையில் எழுதிமுடித்தனர் என்பதும், இப்பொழுது 'எழுத்து அநுபவங்கள்' என்னும் கட்டுரைத் தொடரை சி. சு. செல்லப்பா எழுத ஆரம்பித்திருக்கிறார் என்பதும் பலருக்குத் தெரிந்த சங்கதிகள். மேலே காட்டியுள்ள மேற்கோளில் வல்லிக்கண்ணன் குறிப்பிடுகின்ற விமர்சகர்களில் ஒருவன் என்ற முறையில், தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் கடந்த அரை நூற்றாண்டுக் காலமாக அவ்வப்போது தோன்றி மறைந்த சிறு சஞ்சிகைகளின் வரலாறு தக்கபடி எழுதப்படாமை பெருங்குறை என்பதை நான் போதிய அளவில் உணர்கிறேன். அதேவேளையில் இத்தகைய வரலாறுகள் எழுதப்படும் முறையில் இரண்டு அம்சங்கள் பொருந்தியிருப்பதையும் நாம் கவனித்தல்வேண்டும்.

ஏறத்தாழ முப்பது வருடங்களுக்குப் பின் "நின்று நிதானித்து மதிப்பிட்டுக் கணித்து எழுத" வாய்ப்புப் பெற்ற பி. எஸ். ராமையாவும் சரி, தான் நடத்திய ஏட்டை நிறுத்தி மூன்றாண்டுகள் முடியாத நிலையிலே, "கலங்கலிலிருந்து தெளிவுபெறாமல் இருப்பதாக உணரும்" செல்லப்பாவும் சரி [அவர்களே முன் எச்சரிக்கையாக ஒப்புக்கொள்ளுவது போல] பெருமளவுக்கு அகப்போக்காகவே எழுதிவருகின்றனர். தாம் நடத்திய இலக்கிய ஏடுகள் "சில்வாழ்நாளும் பல்பிணியும்" குறுகிய விற்பனைப் பரப்பும் உடையனவாய் இருந்தமைக்கு உள்ளியல்பான அகக்காரணிகளைக் குறைவாக மதிப்பீடுசெய்து, பெரும்பான்மையோரின் ரசனைக் குறைவு, எழுத்தாளர்களின் ஒத்துழைப்பின்மை, பண்டிதர்களின் ஏளனம், அரசியற் குரோதம் முதலிய புறக்காரணிகளை மிகைப்படுத்திக் காட்டுவது இவர்களது முனைப்பான போக்காகக் காணப்படுகிறது. சுருங்கச் சொன்னால் தமது முயற்சிகளின் தோல்விக்கு யார் தலைமீதாவது பழியைப் போடவேண்டிய மன நிலையில் இவர்கள் இருக்கின்றனர்.

இது ஒருபுறமாக, தலைமுறைப் பிரச்சினையும் இவ் வரலாறுகளுடன் சம்பந்தப்பட்டுள்ளது. மேலே கர்ட்டியுள்ள கட்டுரையிலே வல்லிக்கண்ணன் பின்வருமாறு எழுதியிருந்தார்:

''இலங்கை எழுத்தாளரும் விமர்சகருமான திரு. க. கைலாசபதி ஒரு சமயம் சொன்னார்: 'தமிழ் வாசகர்களைப் பொறுத்தவரை, ஐந்து வருஷங்களுக்கு ஒரு தலைமுறை என்றுதான் கணக்கிடவேண்டியிருக்கிறது. ஐந்து வருஷங்கள் கழிந்ததும் தமிழ்ப் பத்திரிகைகள் புதிய வாசகர் தலைமுறையைப் பெற்றுவிடுகிறது. ......இன்றைய வாசக உலகத்துக்கு மணிக்கொடி, கிராம ஊழியன் முதலிய பத்திரிகைகளைப்பற்றி எதுவும் தெரியாமல் இருப்பது ஆச்சரியமே அல்ல. இது சரியான கருத்தே யாகும்.''

இன்றைய வாசக உலகத்துக்கு முந்திய தலைமுறையினரின் இலக்கிய முயற்சிகளை விவரித்து நினைவூட்டுமுகமாகவே ராமையா, வல்லிக்கண்ணன், செல்லப்பா முதலியோர் எழுதுகின்றனராயினும், கழிவிரக்க உணர்வினால் அகநிலைப்போக்கு அவர்கள் எழுத்தில் அதிகமாக இடம்பெறுகிறது என்பதே நாம் மனங்கொள்ளவேண்டிய செய்தியாகும்.

ஈழத்திலே [யாழ்ப்பாணத்தில்] பார்த்திப வருஷம் [1945] பங்குனி மாதம் வெளிவரத் தொடங்கிச் சிலகாலம் உயிர் வாழ்ந்த மறுமலர்ச்சி, மேலே விபரித்த சிறு சஞ்சிகைகள் மரபில் வந்ததொன்றாகும். 1956ஆம் ஆண்டிற்குப் பின் ஈழத்துத் தமிழிலக்கியத்தைத் தேசிய அடிப்படையிலும் கால அடைவிலும் நோக்கி ஆராயும் போக்கு உறுதிப்பட்ட பொழுது, ஆய்வாளர்களினதும் விமர்சகர்களினதும் [பட்டியல் தயாரிப்போர்களினதும்] வசதிக்காக ஈழகேசரிக்காலம், மறுமலர்ச்சிக்காலம், சுதந்திரன்காலம், தினகரன்காலம் என்றெல்லாம் காலப் பாகுபாடு செய்வது சகஜமாகிவிட்டது. காலத் தொடர்ச்சிக்காக இவ்வாறு விவரிப்பது பொருத்தமேயாயினும், மறுமலர்ச்சி ஒன்றே மேலே குறிப்பிட்டவற்றுள் 'சிறு சஞ்சிகை' என்ற வரைவிலக்கணத்துக்குப் பொருத்தமுடையது. அதுபற்றிச் சில குறிப்புக்கள் கூறுவதே இச் சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

1930ஆம் ஆண்டு இந்தியாவிலே காந்தியடிகள் தலைமையில் தண்டி யாத்திரையும், உப்புச் சத்தியாக்கிரகமும் நடந்தன. அதுகாலவரை தலைவர்கள் மட்டத்தில் பேசப்பட்டு வந்த சுதந்திரம், உப்புச் சத்தியாக்கிரகத்துடன் வெகுஜனப் பண்பைப் பெற்றது. இக் காலகட்டத்திலே இந்தியாவின் ஏனைய பகுதிகளில் நடந்ததைப்போலவே தென்னாட்டிலும் பத்திரிகைத்துறை, குறிப்பாகச் சுய மொழிப் பத்திரிகைத்துறை திடீர் வேகம் பெற்றது. காந்தீய இயக்கத் தொண்டர்கள் உற்சாகத்துடன் பற்பல சஞ்சிகைகளை வெளியிடத்தொடங்கினர். சுதந்திரச் சங்கு, காந்தி முதலிய பத்திரிகைகள் உப்புச் சத்தியாக்கிரகத்தின் நேரடி விளைவுகள். அரசியல் முனைப்பு இல்லாவிடினும் கலைமகள் மாசிகையும் 1931இல் தொடங்கப்பெற்றது. பெரிய அளவில் 1934இல் தினமணி வெளிவரத் தொடங்கியது.

இத்தகைய சூழ்நிலையிலே [1933-9-17] மணிக்கொடி பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறு காரணங்களால் மணிக்கொடி இடையில் பண்பு மாற்றம்பெற்றது. ''மணிக்கொடி, முதல் பதினெட்டு மாதம் ராஜீய வாரப் பதிப்பாக வெளியிடப்பட்டு வந்தது. பின்னர், தமிழ் இலக்கிய வளர்ச்சித் துறையிலிருந்த தேவையை உணர்ந்தும், மணிக்கொடி ஊழியர்களுக்கு இந்தத்துறையிலிருந்த உற்சாகத்தினாலும் மாதமிருமுறைச் சிறுகதைப் பத்திரிகையாக மாற்றப்பட்டது.''

[வல்லிக்கண்ணன், 'சரஸ்வதிகாலம்', தீபம், தீபாவளி இதழ்.]

இந்த மாற்றத்தின் விளைவாகவே நவீன தமிழிலக்கிய உலகின் முதலாவது 'இலக்கிய' சஞ்சிகை உருப்பெற்றது. அதனுடன் தொடர்புடையராய் இருந்த சில எழுத்தாளர் 'மணிக்கொடிக் குழுவினர்' என்ற சிறப்புக்கும் உரியவராகினர். அதன் வரலாறு இங்கு வேண்டப்

படுவதன்று. மணிக்கொடி தமிழ் இலக்கிய உலகிலே ஒருவகையான [முழுமையான] இலக்கிய சஞ்சிகைக்கு முன்மாதிரி எடுத்துக்காட்டாக அமைந்தது என்பதே கவனிக்கவேண்டியதாகும். சுதந்திரச்சங்கு, காந்தி முதலிய ஏடுகளைப்போலவே மணிக்கொடியும் காந்திய அரசியற் பண்ணையில் முளைத்ததொன்றுயினும், தனிப்பட்ட சிலரின் நோக்கினுலும் போக்கினுலும் நவீன சிருஷ்டியிலக்கிய ஏடாகவே பெயர் பெற்றுவிட்டது. இவ்வுருமாற்றமும் குணமாற்றமும் உணர்வுபூர்வமாகச் செய்யப்பட்டதாகும். அதனுலேயே, "தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்தின் வெள்ளி முளைப்பு" என்று மணிக்கொடி தன்னைத் தானே பாராட்டிக்கொண்டது.

மணிக்கொடி இதழிலே 'இலக்கியச் சோலை' என்ற பகுதியைப் படித்தால் அதில் முக்கிய பங்கு வகித்தவர்களின் இலக்கியக் கொள்கை எளிதில் தெளிவாகி விடும். அழகியல் கொள்கையின் அடிப்படை 'கலை கலைக்காகவே என்ற முனைப்பான கோஷத்தின் வெளிப்பாட்டையும் பிரதிபலிப்பையும் அப்பகுதியில் வெளி வந்த சில "பொன்மொழிகள்" நிரூபிப்பனவாயுள்ளன.

> "புதுத்துறைகளில் அழகுகள் செய்யும் காலம் வந்துவிட்டது"
>
> "கற்பனை விற்பனைப்பொருள் அன்று"
>
> "மேதையின் வெள்ளப்பெருக்கே இலக்கியம்"
>
> "எழுதியதெல்லாம் இலக்கியமல்ல"

இவற்றை மேலும் விளக்கவேண்டிய அவசியமில்லை என நினைக்கின்றேன். பொதுமக்கள் அரசியல் அரங்கில் பிரவேசஞ்செய்த 'காந்திய சகாப்தம்' எனப்படும் காலப்பகுதியிலே, "மணிக்கொடி பாரத மக்களின் மனத்திடை ஓங்கி வளரும் அரசியல் லட்சியத்தின் நுனி, முனை, கொழுந்து" என்று அறிமுகஞ் செய்த மணிக்கொடிப் பத்திரிகையில், 'கலை கலைக்காகவே' என்ற கோட்பாடு 'இலக்கியச்சோலை'யில் விஞ்சிநிற்பது முனைப்பான முரண்பாடு என்பதைக் கண்டு கொள்ளப் பெரும் பிரயாசை தேவையில்லை. "கற்பனை விற்பனைப் பொருள் அன்று" என்று நம்புபவர் நடாத்தும் ஒரு 'இலக்கிய' ஏடு தான் பிறந்த அரசியலை மறந்து சோரம்போவதில் வியப்பெதுவுமில்லை.

எனினும் இதனை அதிகம் அடித்துச் சொல்லவேண்டிய அவசியமில்லை. இரண்டொரு விதிவிலக்குகளைத் தவிர மணிக்கொடிக் குழுவினர் அன்றுதொட்டு இன்று வரை அரசியலில் முற்போக்குக்கு எதிர் அணியில் இருப்பது தெரிந்ததே. மணிக்கொடியைத் தொடர்ந்து சூருவளி, கலாமோகினி, கிராம ஊழியன், முல்லை, சந்திரோதயம், தேனீ, சிந்தனை முதலிய சிறு சஞ்சிகைகள் ஒன்றன்பின் ஒன்ருய் கண் சிமிட்டி மறைந்தன.

ஈழத்திலே தமிழிலக்கியத்தைப் பொறுத்தவரையில் 1930இல் ஈழகேசரி வெளிவரத்தொடங்கியது. நா. பொன்னையா, சேர்.பொன்.இராமநாதனைச் சிறப்பிக்குமுகமாகத் தொடங்கிய இப் பத்திரிகை 'காந்திய யுகத்தின்' பிரசார கருவியாகவும் இயங்கியது. 1931இல் புதிய அரசாங்க சபை ஒன்றை ஏற்படுத்தும் அரசவைக் கட்டளை வெளியிடப்பட்டது. இதுவே டொனமூர் அரசியல் திட்டமாகும். இதைத் தொடர்ந்து இங்கும் அரசியல் 'சூடு' பிடிக்கலாயிற்று. 1931இல் கொழும்பிலிருந்து வீரகேசரி வெளிவரத் தொடங்கியது.

இப் பொதுப் பின்னணியிலே, ஜனரஞ்சகமாக ஈழகேசரி, வீரகேசரி முதலியன இயங்குகையில் கற்ருேருக்கும், நவீன தமிழிலக்கிய ஆர்வலர்களுக்கும் வெளிப்பாட்டுச் சாதனங்கள் தேவைக்கேற்றவாறு இருக்கவில்லை. முப்பதுகளில் தமிழ் நாட்டில் தினசரிப் பத்திரிகையான தினமணி வருஷ மலர்கள் வெளியிட்டு எழுத்தாளர்களின் இலக்கிய வேட்கைக்கும் கலை உணர்ச்சிக்கும் உயர்வடிவம் கொடுத்தது போல, ஈழத்தில் [பொன்னையாவின் இலட்சிய நோக்கினுல்] ஈழகேசரி இலக்கிய

நோக்கிற்கும் ஓரளவு ஈடுகொடுத்து வந்தது என்பது உண்மையே. இதில் சோ. சிவபாதசுந்தரம் பெரும்பங்கு வகித்தார். எனினும் மணிக்கொடி போல, பின்னல் வந்த சிறு சஞ்சிகைகள் போல முழுக்க முழுக்க இலக்கியத்திற்கான ஏடு ஒன்று வேண்டுமென ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் சிலர் கனவுகண்டனர்.

ஈழத்து எழுத்தாளர்கள் மணிக்கொடி காலத்திலிருந்து தென்னிந்திய சிறு சஞ்சிகை முயற்சிகளைக் கூர்ந்து கவனித்து, மானஸிகமாக அவற்றிலே பங்குபற்றியும் வந்திருக்கின்றனர். உதாரணமாக ஈழ கேசரியில் [சித்திரபானு, ஆவணி, 15], சோ. சிவபாதசுந்தரம் பின்வருமாறு எழுதியிருந்தார் :

> "மணிக்கொடி நின்றுவிட்டது...சில நாட் கழித்து இதே கோஷ்டியார் சூருவளி என்ற சண்டமாருத இலக்கிய சஞ்சிகையொன்றை ஆரம்பித்தார்கள், அதுவும் ஒரு இலக்கிய சரித்திரத்தை உண்டாக்கிவிட்டுச் சில மாதங்களில் ஒருதொகைப் பணத்தை விழுங்கிவிட்டு மறைந்துவிட்டது.
>
> சஞ்சிகை நின்ருலும், கொள்கையும் எழுத்தாளர்களின் விறுவிறுப்பும், இலக்கியப்போக்கும் நின்றுவிடுமா? நமது புதிய எழுத்தாளர் கோஷ்டி திருச்சிராப்பள்ளியில் கூடி, கலாமோகினி என்ற புதிய இலக்கிய சஞ்சிகையை ஆரம்பித்திருக்கின்றனர். இப்பத்திரிகையைக் கண்டதும் 'அப்பாடா, புதிய தமிழுக்கு ஆதரவு குன்றிப்போய்விடவில்லை' என்று ஆறுதல் கிடைக்கிறது."

இத்தகைய மனேநிலையின் தருக்கரீதியான விளைவே மறுமலர்ச்சி என்பதில் தவறு எதுவுமில்லை.

மரபுவழித் தமிழ்க் கல்வியைப் பேண விரும்பிய அறிஞர்கள் 1933 இல் ஞாயிறு என்னும் சஞ்சிகையையும், 1942 இல் கலாநிதி என்னும் முத்திங்கள் வெளியீட்டையும் தொடங்கியிருந்தனர். இத்தகைய பின்னணியிலேயே அ. செ. முருகானந்தம், தி. ச. வரதராசன் ஆகிய இருவரையும் ஆசிரியர்களாகக் கொண்டு மறுமலர்ச்சி வெளிவரத் தொடங்கியது.

முதலாவது இதழிலே 'முகத்துவாரம்' என்ற பகுதியில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

> "எழுத்தாளர்களும், ரஸிகர்களும் சேர்ந்து ஆரம்பித்த பத்திரிகை இது. இதனுடைய வளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சி. இதனுடைய இதயத் துடிப்பு தமிழ் இலக்கியம்தான்.
>
> அரசியல், சமூக விஷயங்களைக் குத்திக் கிளறுவதற்காகவே ஒரு புதுமையான இலக்கியத்தை மறுமலர்ச்சி சிருஷ்டிக்கப்போவதில்லை. ஆனல் இலக்கியத்தின் வளர்ச்சியிலே சமூகத்தின் வளர்ச்சி பின்னிவரும் என்பதை மறுமலர்ச்சி நிரூபிக்கும்."

கொள்கைப் பிரகடனமாய் அமைந்திருக்கும் இப்பகுதிக்கு வியாக்கியானம் செய்ய வேண்டியதில்லை. அரசியல் சமூக விஷயங்களை விலக்கிவிட்டொழிக்கும் போக்கை ஐயத்திற்கு இடமேயின்றிக் கண்டுகொள்ளலாம். அதற்காக மறுமலர்ச்சியை நடாத்தியவர்களுக்கு அரசியல் ஈடுபாடிருக்கவில்லை என்பது அர்த்தமாகாது. ஆனல் "இலக்கியத்தில் அரசியல் வேண்டாம்" என்ற அரசியல் நிலைப்பாடு அவர்களுக்கு இருந்தது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

இன்று பின்னேக்கிப் பார்க்கும்பொழுது மறுமலர்ச்சி நடாத்தியவர்களுக்கு சூருவளி, கிராம ஊழியன் ஆகியன முன்மாதிரிகளாய் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. குறிப்பாக கு. ப. ரா்ஜ கோபாலனை [கௌரவ] ஆசிரியராகக் கொண்டு கிராம ஊழியன் வெளிவரத் தொடங்கிய காலம்முதல் [1943-8-15] ஈழத்து எழுத்தாளர் சிலர் அச்சஞ்சிகையுடன் நெருங்கிய தொடர்புடையோராய் இருந்தனர். மறுமலர்ச்சி சஞ்சிகையுடன் அணுக்கமான உறவுகொண்டிருந்த நாவற்குழியூர் நடராசன், 'மஹாகவி,'

'சோதி,' க. சி. சரவணமுத்து, சு. வேலுப்பிள்ளை, வரதர் முதலியோர் ஊழியனுக்கு அடிக்கடி எழுதினர். கலைமகள் மாசிகையில் எழுதிவந்த இலங்கையர்கோனும் கிராம ஊழியன் "நின்றுவிடுகிறவரை அன்புடன் ஒத்துழைத்தார்." வல்லிக்கண்ணன் முயற்சியால் அச்சஞ்சிகையின் ஆண்டுமலர் 'தமிழகத்தையும் இலங்கையையும் இணைக்கும் இலக்கியப் பாலம் ஆகச் சிறப்புற அமைந்தது.' அதைப்போலவே மறுமலர்ச்சி இதழ்களில் 'தமிழின் மறுமலர்ச்சி என்ற தலைப்பிலே வெளிவந்த கட்டுரை வரிசையில் வல்லிக்கண்ணன், V. கோதண்டராமன், வி. ரா. இராஜகோபாலன், முதலிய தமிழக எழுத்தாளர்கள் இடம்பெற்றனர். அது மட்டுமல்லாது, "புதுயுக இலக்கியத்தின் பிரதிநிதி கிராம ஊழியன், மாதம் இருமுறை மறுமலர்ச்சிப் பத்திரிகை. ஆசிரியர்: வல்லிக்கண்ணன்" என்னும் விளம்பரமும் மறுமலர்ச்சி இதழ்களில் வெளிவந்தன. இவையாவற்றையும் கவனிக்கும்பொழுது மறுமலர்ச்சி, மணிக்கொடி காலமுதல் ஒன்றுபோக ஒன்றுய் வெளிவந்த 'தூய' இலக்கிய ஏடுகளையே இலட்சியமாகக்கொண்டு இயங்கியது என்பதும், குறிப்பாக கிராம ஊழியன் பத்திரிகையால் பெரிதும் பாதிக்கப்பெற்றிருந்தது என்பதும் புலனுகும். இனம் இனத்தை நாடுவது இயல்புதானே. இறுதியில், ஏனைய சிறுசஞ்சிகைகள் பலவற்றைப்போலவே, "எத்தனையோ கஷ்டங்கள் கட்டுப்பாடுகளுக்கிடையே நாம் முன்னேறவேண்டியிருக்கிறது" [மறுமலர்ச்சி, விய-தை] என்ற ஓயாத முறையீடுகளுக்கு மத்தியில், "தமிழ்ப் பூங்காவில் உள்ள மறுமலர்ச்சி இலக்கியச் செடியிலே இன்று ஒரு புதிய மலர் பூத்திருக்கிறது" என்று முதல் இதழில் சுயதிருப்தியுடன் கூறிக்கொண்ட மறுமலர்ச்சியும் தன் ஆயுளை முடித்துக்கொண்டது.

## மறுமலர்ச்சி என்றுல் என்ன?

இலுப்பை விருக்ஷம் ஒன்று பூவும் மொட்டுமாக நிறைந்து குலுங்குகிறது. மலர்ந்த புஷ்பங்கள் எல்லாம் ஒவ்வொன்றுக வாடி அடுத்தடுத்த நாட்களில் மண்ணில் உதிர்ந்துவிடுகின்றன. நாளடைவில் இளம் மொட்டுகளும் வாய்திறந்து மலர்ந்து இதழ் இதழாகச் சொரிந்து காற்றேடு போய்விடுகின்றன. அப்படியே சிறு சிறு பிஞ்சுகளும் முற்றிக் காயாகிப் பழுத்துக் கொட்டுண்டு பசுமை கொட்டிக்கொண்டிருந்த இலைகளும் பழுப்பேறி உதிர்கின்றன. மரம் இப்போது நிர்வாணமாக, வெறுந்தடிகளாக வெறிச்சென்று போய்விட்டது.

சில மாதங்கள் கழிந்ததும் மறுபடியும் இலுப்பை மரம் குபீரென்று துளிர்விட்டது. எல்லாம் ஒரே பொன்நிறம். புன்முறுவல் செய்யும் இளந்துளிர்கள், பிறகு அரும்புகள், மொட்டுகள், அகலவிரிந்த புதுமலர்கள் எல்லாம் காற்றில் சிலுசிலிர்க்கின்றன.

இதுதான் மறுமலர்ச்சி! பொதுவாக மரம் செடிகள் எல்லாவற்றிலுமே இந்த மறுமலர்ச்சி அடிக்கடி ஏற்படுகிறது.

காலப்போக்கை அனுசரித்து மனித சமுதாய வாழ்விலும், கலைகளிலும் இப்படி மறுமலர்ச்சி இடையிடையே ஏற்படுகிறது. பாஷை சம்பந்தமான வரையில் இந்த மறுமலர்ச்சி நடைபெறுகிறது; நடைபெறவேண்டியதுதான்.

அ. செ. மு.

அ. செ. முருகானந்தன்

# இலக்கியக்களத்து மேடு - சில நினைவுகள்

எப்பொழுதோ வெகு காலத்திற்கு முன் அன்றெல்லாம் 'ஈழகேசரி' ஒன்று தான் தரமானதொரு இலக்கிய ஏடாக ஈழத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்நாளில் பத்திரிகைச் சிறுவர் பகுதிக்கு அடிக்கடிஎழுதிவந்த இராமநாதன்கல்லூரி மாணவியொருவர், ''பத்திரிகை மாமா எனக்குப் பத்திரிகைத் தொழில் கற்றுக் கொள்ள நிரம்ப ஆசையாயிருக்கு, அது எங்கே சாத்தியப்படும் சொல்லுங்கள்'' என்று கேட்டு எழுதியிருந்தார். இலங்கை யிலே எங்கேயும் அதுமாதிரிப் பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்கெனப் பள்ளிக்கூடமோ பயிற்சி வகுப்போ அந்நாளில் நடைபெற்ற தில்லை. இந்தியாவிலுங்கூடத்தான் தமிழ கத்திலும் அப்படி ஒன்று இருந்து இயங் கியதில்லை. பத்திரிகைக் காரியாலயங்களே தொழிற்களமாகவும் அதே சமயம் தொழிற் பயிற்சிக் கழகமாகவும் இருந்தன. அந்நிலையில் நான் என்ன பதில் அளிப்ப தென்று தெரியாதவனாய் பம்பாயில் எங்கேயோ நடைபெற்ற பத்திரிகைத் தொழிற் பயிற்சிக் கழகத்தின் விலாசத் தைத் தேடி எடுத்து அனுப்பிவைத்த துடன் மௌனமாக இருந்துவிட்டேன்.

சிறுவர்பகுதிச் சிறார் இவ்விதமாக எவ்வளவோ கேட்டு எழுதுவார்கள், தமாஷ் பண்ணுவார்கள், குறும்பு விடுவார் கள், 'கேசரி மாமா' இருப்புக் கலைய மாட்டார். தமது கொலுவலை விட்டு வெளிப்படவே மாட்டார். சிலசமயம் மாணவிகள் கூட்டமாகத் திரண்டு படை யெடுத்து வந்தாலும் அது நடக்காது. ''படிக்கிறதுக்கு நல்ல புத்தகங்களின் 'லிஸ்ட்' ஒன்று கொடுங்கள்'' என்று கேட்பாள் ஒருத்தி. ''ஐயோ எவ்வளவு ரோஜாப் புஷ்ப்பங்கள் எங்கள் தோட்டத் திலே, ஒன்று அனுப்பிவைக்கட்டுமா? ஆனால் உங்களிடம் சேர்வதுக்குள்ளாக அது வாடிப்போய்விடுமே கேசரிமாமா'' என்று ரோஜாவில் தேன்சுவை சொட்ட எழுதுவாள் மற்றொருத்தி. வளர்ந்துவந்த புதிய பத்திரிகைத்தமிழும் அதன் வளம் மிகு வசனநடையும்: அந்தமட்டில் புதிய பரம்பரையை வசப்படுத்திக் கொண்டு வந்த காலம் அது. இரண்டாம் உலகப் போரின் முன்பருவம். அலயன்ஸ், நவயுகம், சக்தி, தமிழ்ப்பண்ணை, கலைமகள் என்று புதிதுபுதிதாகப் பல பிரசுராலயங்கள் தோன்றிப் புதிய தமிழ் வளர நூல் வெளியீட்டுப் பணிபுரிந்தன. கதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, விஞ்ஞானம், பொருளாதாரம், சரித்திரம் என்று ஏராளம் நூல்களைக் காகிதக் கட்டுப் பாட்டையும் பொருட்படுத்தாமல் அழகுற வெளியிடலாயின. கல்கியாசிரியர் விகட னிலிருந்து விலகித் தாமே சொந்தமாகப் புதிய பத்திரிகை ஆரம்பித்தார். 'மணிக் கொடி' இலக்கியப் புரட்சிக் கோஷ்டி யினரின் எழுத்திலக்கியங்கள் நூலுருப் பெற்றன. சோ. சிவபாதசுந்தரம் அவர் தரத்து இதர ஈழத்து எழுத்தாழருடனே கூடித் தமது காண்டீப தனுசிலே டங்கார சுருதி இசைத்து நாணிசை எழுப்பி, சங் கம் முழங்கி, தமது பேனா வன்மையினால் ஈழகேசரி வாயிலாக ஈழத்திலும் புதிய தமிழ் வளரப் பெரும்பணியாற்றினர்.

பங்கிம்சந்திரர், சரத்சந்திரர், தாகூர், டால்ஸ்டாய், பேர்ள்பக் போன்ற பிரபல கதாசிரியர்கள் எழுதிய நாவல், சிறுகதை களை [அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்பை] படித்தவர்களும், தமிழ்நாட்டுக் கதை

களைச் சுவைத்தவர்களும் பத்திரிகாலயங்கள், எழுத்தாளர்கள், கதாசிரியர்கள் என்போரைக் கனவுகாணும் ஆசைவயப் பட்டவர்களானார்கள். பங்கிமின் 'ஆனந்த மடம்' போன்ற புதிய இலக்கியப் படைப்புகளினால் நூற்றாண்டுகால அடிமை மயக்கம் தெளிந்து தேசிய விழிப்புணர்ச்சி எய்தியோர் ஏராளம்பேர்.

இத்தகைய இலக்கிய இரசிகர்கள் கூட்டத்தில் அகப்பட்டுக்கொண்டவர்களே மேலே குறிப்பிட்ட 'பென்' சிறார். கடல்கடந்த கற்பனாவுலகில் சஞ்சரித்த இவ்விளம் இலக்கியவரும்புகளுக்கு கண்முன்னே ஒன்று ஆகவும் எல்லாம் ஆகவும் தோற்றப்பட்டது சுன்னாகத்திலிருந்த ஈழகேசரிப் பத்திரிகைக் காரியாலயம். ''அடேயப்பா எத்தனையாயிரம் புத்தகங்கள் மத்தியிலே ஆசிரியரும் உதவியாசிரியர்களும் எழுத்தாளர்களும் கொலுவீற்றிருக்கிறார்கள்'' என்று அவ்வழியே ஏகும்போது உள்ளே எட்டிப்பார்த்தவர்கள் மலைத்தார்கள். திருமகள் புத்தகசாலையுடனே இணைந்தாற்போலிருந்த காரியாலயத்தைப் பார்த்துத்தான் அப்படிப் பிரமித்தார்கள். அத்தனையாயிரம் புத்தகங்களின் மேலே நாற்காலி போட்டுக் கொண்டிருப்பதுபோல. அதனாலெல்லாம் நமக்கும் பெருமைதான். வாழ்க அதிபர் பொன்னையாபிள்ளை. வாழ்க புத்தகசாலை நிர்வாகி அப்பாக்குட்டி. பின்னாளில் பாராளுமன்றத்துப் பிரதிநிதியாகிப் புகழ்பெற்ற அமரர் பொன். கந்தையாவை ஆசிரியர் ஆகக்கொண்டு அந்நாளில் வெளியான அந்தப் புதிய ஆங்கில வார வெளியீடான கேசரித் தோழரையுங்கூடத்தான் வாழ்க வாழ்கவென்று வாழ்த்துவோம். ஹன்டி பேரின்பநாயகம், எஸ். பி. அமரசிங்கம், எஸ். கே. கந்தையா, துரைராசசிங்கம், கே.நேசையா, பொ. நாகலிங்கம் என்று எத்தனை புதிய எழுத்தாளர்களை, ஆங்கிலமொழியில் திறம்பட எழுதும் ஆற்றல் கைவந்த பேனா மன்னர்களை ஆங்கு சந்தித்தோம்!

ஃ ஃ ஃ

இன்றைக்கெல்லாம் அவ்விதமாகப் பத்திரிகைத் தொழில் கற்றுக்கொள்ளும் ஆசையுடனே ஒருவர் முன்வருவாரேயானால் ''உங்களைப்போன்றவர்களுக்காக 'ஈழநாடு' பத்திரிகை ஸ்தாபனத்தின் கதவுகள் எந்நாளும் திறந்திருக்கிறதே' என்று அன்னவரை ஆற்றுப்படுத்தக் கூடியதாக யாழ்ப்பாண நாட்டுக்குப் புதியதானதொரு தொழில் நிறுவனமாக 'ஈழநாடு' தினசரிப் பத்திரிகை நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரிய மாறுதலே. கொழும்பு நகருக்குப் பல்நூறுகல் தூரமாகத் தினசரிப் பத்திரிகை நடத்துவதற்கான எத்தனையோ வாய்ப்புகள் இல்லாத ஒரு முடுக்கில் தொழில் அநுபவ மிடுக்கே மூலபலமாக இது மாதிரித் தினசரிப் பத்திரிகை வெளியிடுவது மாபெரும் சாதனையுமாகக் கருதற்குரியதே.

கட்டுரை ஆரம்பத்தில் குறிப்பிட்ட எழுத்திலக்கிய எழுச்சிக்கு வருவோம். மகாகவி சுப்பிரமணியபாரதியார் சாதித்த கவிதைப் புரட்சியுடனே செந்தமிழ் நாடெங்கும் உண்டாயிருந்த விழிப்புணர்ச்சி தமிழ் எழுச்சியானது நாளுக்கு நாள் வளர்ந்து பாரதியின் அடிச்சுவட்டில் பாரதி பரம்பரையாகக் கவிஞர்களும், எழுத்தாளர்களும் இலக்கிய கர்த்தாக்களும் தோன்றினர். பத்திரிகைகள் பலதோன்றின. நூல்கள் பல உருவாயின. இதனால் எல்லாம் மக்கள் மத்தியில் மொழி புதிய ஜீவசக்தி பெறலாயிற்று. புதிய தமிழில் வானவில் அழகு பிறந்தது. இந்தப் புதிய தமிழின் கவர்ச்சியும், அதன் காட்டாற்று வளர்ச்சியின் உத்வேகமும் ஈழத்திலும் பரவிற்று. 1942ம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தின் பலதிக்குகளிலுமிருந்தவர்களைச் சுன்னாகம் திசையாக முதலிழுத்து, அதன்பின் யாழ் நகரில் இலக்கிய நண்பர்கள் சங்கமாகப் பரிணமித்து இலக்கிய கலந்துரையாடல், கிராமங்கள் தோறும் இலக்கிய விழாக்கள், நூல் நிலையம், கையெழுத்துப் பத்திரிகை, முடிவில் 'மறுமலர்ச்சி' என்ற பெயரில் ஒரு மாத சஞ்சிகையாகவே அந்த எழுத்திலக்கிய எழுச்சி வெளிப்பட்டுவிட்ட போது அந்நாள் மட்டில் ஈழகேசரி வாயிலாக அவர்களது எல்லாவித இலக்கியப் பரிசோதனைகளுக்கும்

எரிமலை

ஆதரவளித்துக் கொண்டிருந்த யானும் அதன்பின் அவர்களில் ஒருவனுகிப் புதியதொரு களத்தில் குதித்தேன்.

புதிய பத்திரிகைக்கு ஆதரவு தேடி, ஊரெங்கும், நாடெங்கும் இலக்கிய யாத்திரை செய்தகாலை முன்பு குறிப்பிட்ட இலக்கிய அரும்புகளைச் சந்திக்க நேர்ந்தது. அவர்களிற் பலர் எங்கள் புதிய பத்திரிகைக்கு எழுதவும் எழுதினுர்கள். 'வரதர்' அவற்றை வாசித்து வெட்டிக் கொட்டி செதுக்கி எடுத்துச் சிற்ப ஓவியங்களாகப் படைத்தளித்தார். முன்பு எழுத்தாளர் பள்ளிக்கூடம் விசாரித்த மாணவி அது சமயம் என்ன எழுதினுர் தெரியுமா? எழுதுவதற்கு வழிகண்டு பிடித்து விட்டதாயும் பரீட்சையில் பெயில் பண்ணி வாழ்க்கையில் தோல்விகாணுவதும் மனமுடைந்து போவதுமான அவ்வித அனுபவங்களே எழுத்தாளர் ஆவதற்குச் சிறந்த வழியெனத் தெரிந்து கொண்டு விட்டதாயும் எழுதினுர் - ஒரு கதையாக. மறுமலர்ச்சிச் சஞ்சிகைத் தொகுதியில் இன்றைக்கும் அதை வாசிக்கலாம்.

இரண்டு ஆண்டுகள் மட்டில் யாழ்ப்பாணத்து இலக்கிய நண்பர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரது கூட்டுறவு முனையில் இவ்விதமாக நடைபெற்ற ஈழத்தின் முதலாவது தரமான மறுமலர்ச்சி இலக்கிய சஞ்சிகைக்கு அதன் ஆரம்ப நாட்களில் ஆதரவு திரட்ட வெளியூர் சென்று ஆங்காங்கு இலக்கிய கலந்துரையாடல் (பெரும்பகுதியும் அவ்வவ்வூர்ப் பிரமுகர் களில்லங்களிலும், இலக்கிய நண்பர்கள் சூழலிலும்) நிகழ்த்திவந்த போதுதான் கதாசிரியர் தாழையடி சபாரத்தினத்தை திருக்கோணமலையில் ஆங்கு நகராட்சி மன்றத்தும் தீயணைப்புப் படையின் தளபதியாக விருந்த அவரது மூத்த சகோதரரில்லத்தில் முதன்முறையாகச் சந்திக்க நேர்ந்தது. அந்நாளில் சபாரத்தினம் எழுதிய 'தெருக்கீதம்' என்ற சிறுகதை சிலமாதங்கள் முன்னதாக மறுமலர்ச்சியில் வெளியாகியபோது பல நாட்களுக்குப் பிறகு நமக்குவந்த நூற்றுக் கணக்கான சிறுகதைகள் மத்தியில் ஒரு முத்தாக அது மறுமலர்ச்சி ஆசிரியர் குழுவினுல் வரவேற்புப் பெற்றிருந்தது.

திருக்கோணமலைச் சந்திப்புடனே சபாவும் நானும் இணைபிரியா நண்பர்களாகிவிட, அதன்பின் சில ஆண்டுகள் திருக்கோணமலையிலேயே தங்கிவிட்டேன். எழுத்தாளர்கள் இருவர் சேர்ந்தால் அவர்கள் கை சும்மாவா இருக்கும்? கொழும்புத் தினசரிகளுடன் தொடர்பு கொண்டு செய்தியும், செய்திக்கடிதங்களும் கதை, கட்டுரைகளும் எழுதலானேன். சபா [நேவி]யில் சேர்ந்தார் 'மறுமலர்ச்சி'யின் வளர்ச்சியைக் கவனித்துக் கொண்டே இருபேருங்கூடி மற்றும் அவ்வூர் நண்பர்கள் சிலரின் அன்பாதரவுடனே ஒரு புதிய மாதமிருமுறைப் பத்திரிகையும் புதிதாகத் தொடங்கி நடாத்தினேம். அடேயப்பா, அந்தச் சிறிய பத்திரிகைக்குக் கூட அவ்வூரிலே என்ன ஆதரவு! நமது சொந்தப் படைப்பு அந்த மாதிரிச் சுடச்சுட, பறக்கப் பறக்க விற்பனையானதைப் பார்த்து நாமே வியப்பெய்தினேம். கல்கி ஆசிரியர் நமது புதிய பத்திரிகை நீண்டகாலம் வாழ ஆசிகூறி வாழ்த்துச்செய்தி அனுப்பியிருந்தபோதிலும், அதன் ஆயுள் நீடித்து நிலைபெருத வகையில் நமக்கு வாய்த்த அச்சகம் மோசம்பண்ணிவிடவே, ஐந்தாவது வெளியீட்டுடனே நமது துணிச்சலான முயற்சியைத் தற்காலிகமாகக் கைவிட்டுவிட வேண்டியதாயிற்று. அந்தப் பத்திரிகை குறித்து இன்றைக்கும்கூட யாராவது வினவினுல் அவர்களுக்கு நான் சொல்லி வரும் பதில் என்னதெரியுமா? "ஓகோ அந்தப் பழைய முயற்சியைக் கேட்கிறீர்களா? லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் விமானப் பதிப்பு பார்த்திருப்பீர்களே அதேயளவு டிமை $\frac{1}{8}$ சைஸ்தான் என்னுடைய அந்த முதலாவது சொந்தப் பத்திரிகையும். எழுத்துகள்கூட அப்படியே அதே அச்சு' கண்ணுக்குத்தெரியாது! ஆனுல் பக்கங்கள் குறைவு. லண்டன் டைம்ஸ் விமானப்பதிப்பு காகிதம் இலேசாக மெல்லிய தாள்களாயிருப்பதால் அதிக பக்கங்கள் போட அவர்களால்

முடிகிறது. புதிய எழுத்துக்கள் புதிய மிசின்கள் எல்லாம் வரும் வரும் என்று நீண்டகாலம் எதிர்பார்த்து, ஆருவது இதழின் பிரசுரத்தை நிறுத்திவைத்திருந்தேன். ஆனுல் துரதிஷ்டவசமாக எழுத்துக்களும் அச்சுயந்திரங்களும் ஏற்றிவந்த தோணி எங்கேயோ ஆழ்கடலில் மூழ்கிப் போனதுபோல், ஏதுமே ஒப்பேருமல் ஆகிவிடவே எங்கள் புதிய பத்திரிகையின் ஆருவது இதழையும் அதன்பின் நூருவது இதழையுமே தொடர்ந்து வெளியிட்டுக் 'கல்கி' யார் வாழ்த்துரைத்தபடி நாட்டிலுள்ள தீமைகள் அனைத்தையும் எரித்து ஒழிக்கமுடியாத துயர முடிவு ஆகிவிட்டது.'' இவ்வாறு நான் கூறிவந்தபோது ஒரேயொரு நண்பர் மட்டும் என் தோல்விக்காக மனமிரங்கி ''அடடா அச்சகக் கெடுபிடிகளெல்லாம் நிவர்த்தியாகி அன்றைக்கே யாவும் அநுகூல சாத்தியமாகக் கைகூடி வந்திருந்தால் இம்மட்டில் உங்கள் அட்டமி நவமிப் பிரசுரம் மேலே பறந்துகொண்டிருக்குமே'' என வாய்மொழிந்து அனுதாபப் பட்டார். அவர் காற்றுடிவிடும் பேர்வழியல்லர்; காகிதத் தோணிவிடும் சிறியாரும் அல்லர். ஆதலால் அவர் பேச்சை அந்தரங்க சுத்தியானதாக ஏற்றுக்கொண்டேன். தமிழராகப் பிறந்த நாம் அனைவரும் மேலே போகவேண்டும் மேலே பறக்க வேண்டும் என்றுதானே கவிபாரதியும் கூறிப்போந்தார். எங்களது அந்தப் புதிய பத்திரிகையின் இலட்சியப் பற்றுதல்கூட ''பூமியில்'' எவர்க்குமினி அடிமை செய்யோம் பரிபூரணனுக்கே அடிமைசெய்து வாழ்வோம்'' என்ற பாரதியின் மணிவாக்கை - கவி வாக்கைத் தழுவியதாக அமைந்தது.

நமக்கு முற்றிலும் புதியதான ஊரில் தமிழ் வாழும் பூமி 'ஈழத்தமிழகம்' என்ற ஒரே நேயப்பான்மை நெஞ்சத்தில் அலையடிக்க, நமது புதிய முயற்சிக்குத் திரண்ட ஆதரவு நம்மை அதன்பின்னும் ஓய்ந்திருக்கவிடவில்லை. சில மாதங்களில் மீண்டும் அதனைத் தோற்றுவிப்பதற்கான முயற்சியில் இறங்கினேம். இம் முயற்சியில் நமக்கு எல்லாவித ஒத்துழைப்பும் உடன் பிரயாசையும் நல்குவதற்கு என் பழையநாள் பள்ளிக்கூட இளைஞர் ஒருவர் இத்தடவை என்கூடத் தங்கியிருந்ததனுல், மாண்டுபோன எங்கள் பத்திரிகைக்குப் புத்துயிர் அளிப்பதற்காக நாம் நடாத்த எண்ணிய கதம்பக் கச்சேரி நிகழ்ச்சியை முதலிருந்து கடைசிவரை நாமே முழுப்பொறுப்பேற்றுச் செய்யத் துணிந்தோம். ஆனுலும் அவ்வாருகவெல்லாம் முழுமூச்சாய்ப் பாடுபட்டும் நாம்எண்ணியபடி நடக்கவில்லை. புகழ்பெற்ற யாழ்ப் பாணத்துக் கலைஞர்கள் மோட்டாரிலே பறந்துவந்து திருமலைக் கலைஞர்களுடனே இணைந்து எல்லோருமாகத் தங்கள் முழு ஆற்றலை வெளிப்படுத்தி ஜீவகீதம் பாடியும் அணைந்ததீபம் சுடர்விடாமலே அணைந்து விட்டது.

மூன்று மாதங்களில் ஐந்து இதழாக மலர்ந்த இந்தப் புதிய இலக்கிய வெளியீடு திருமலைத் தேனீக்களுக்குத் தமிழ் விருந்து அளித்ததுடன் ஐந்து மணி காலம் அரியதொரு இசைவிருந்தும் அளித்துவிட்டு தன் ஆயுளை இவ்விதமாக முடித்துக்கொண்டது. முழுக்கவும் என் சொந்தப் பிரயாசையில் உருவாக்கம் பெற்ற சுய உரிமைப் படைப்பு என்பதிலே இந்தப் பத்திரிகை என்றைக்கும் என் நினைவில் வாழும். அதுபோலவே, திருமலை கண்ட முதலாவது உள்ளூர்ச் செய்திப் பத்திரிகை என்றவகையில் அது அவ்வூர் இலக்கிய நண்பர்கள் நினைவிலும் வாழும். எதை மறந்தாலும் அவ்வூர் நீதிமன்றம் ஏகிச் சமாதான ஒதுக்கத்தில் பத்திரிகையின் ஆசிரியரும் பிரசுரகர்த்தாவும் நானே என நீதவான் முன்னுல் வெளிப்பட்டுத் தோள்கொட்டிக் கையொப்பமிட்டதை மறக்கமுடியாது! அது ஒரு செய்திப் பத்திரிகையானுலும், ஐந்தே ஐந்து இதழ்களை வெளியானபோதிலும் அந்த மூன்று மாதகாலம் அது நன்றுகவே வாழ்ந்தது. வடக்கிலும் கிழக்கிலும் புகழ்பெற்ற எழுத்தாளர்களாயிருந்த என் இலக்கிய நண்பர்கள் பலர் கதை, கட்டுரை, கவிதை எல்லாமே எழுதினுர்கள். மட்டுநகர் எழுத்தாள நண்பர் ஒருவர் ''அபேதன்'' என்ற புனைபெயரில் மறைந்திருந்து

கொண்டு சுவையான 'கிழக்குத் தபால்' எழுதிவந்தார். 'தியாகி' ஒரு கட்டுரை எழுதியபோது விகடச் சுவையுடன் குறிப்பிட்டதில் ஒருபகுதியை இங்கு சுருக்கித் தருகிறேன், படித்துப்பாருங்கள். தியாகி எழுதினர்: சமீபத்தில் திரிகோணமலைக் குப் போய்வந்த ஒரு நண்பர் என் தலையில் அடித்தாற்போல் சொன்னர் "நீங்கள் என்னவேண்டுமானுலும் சொல்லுங்கோ சார். நான் சொல்லுகிறேன் திரிகோண மலைக்கு அடியில் எரிமலை இருக்கவே இருக்கிறது இல்லாவிட்டால் அந்த ஊருக்கு அவ்வளவு உஷ்ணம் எங்கிருந்து வரும்? அந்தக் கன்னியாவின் வெந்நீர் ஊற்று எங்கிருந்து வரும்? அங்குள்ள வீடுகளில் எப்படி அடிக்கடி நெருப்புப் பிடித்துக்கொள்ளும்?"

அவருடைய அந்தக் கேள்விக்கு அப்போது என்னல் பதில்சொல்ல முடியவில்லை. நான் என்ன நில ஆராய்ச்சிக் காரனு அல்லது எரிமலை ஆராய்ச்சிக் காரனு?

நண்பர் சொன்ன அதே விஷயத்தை இப்போது யாராவது என்னிடம் சொன்னுல் நான் சொல்லக்கூடிய பதில் இது தான்.

"திரிகோணமலையில் எரிமலை இருக்கிறது. நன்ருக இருக்கப்போகிறது. மாதம் இருமுறை அக்கினிப் பிழம்பை அள்ளி வீசிக்கொண்டிருக்கப்போகிறது. ஆனுல் அது திருகோணமலைக்கு அடியில் இருக்கப் போவதில்லை. மேலே கற்பனைவானிலே பன்னிரண்டு பக்கங்கள் கொண்ட ஒரு செய்தித் தாளாகப் பறக்கப்போகிறது" என்பதுதான்.

மேலும், "இது எல்லோருக்கும் உஷ்ணமாக இராது. ஏந்திப்பிழைக்கும் ஏமாற்றுக்காரர்களை மட்டும் தகித்துச் சாம்பராக்கும் உஷ்ணம் அதனிடம் காணப் படும்.

"கன்னியாவைப்போல் இது வெந்நீரைத் தராது. ஆனுல் கன்னியாவின் வெந்நீர் முடக்கு வாதத்தையும் துடக்குப் பேதத்தையும் மாற்றுவதுபோல் இது முடக்கு விவாதத்தையும் மூடப் பிடி வாதத்தையும் அகற்றித் தொலைக்கும்."

"ஏழை மக்களின் எளிய குடிசைகளுக்கு இது நெருப்புவைக்க முனையாது. ஆனுல் பணத்திமிரிலே சொக்குண்டு அரசியல் விபச்சாரம் நடாத்தும் போலித் தலைவர்களுக்கும் கேலிக் கும்பல்களுக்கும் அவர்கள் கூடாரத்துக்கும் அணைக்கமுடியாத அக்கினிச் சுவாலையாக மூட்டும்" என்று சொல்லவிரும்புகிறேன்.

என் அபிலாஷை வீண்போகாதபடி அ. செ. மு. வின் புதிய பத்திரிகை நீடு நின்று உழைக்குமென எதிர்பார்க்கிறேன். இவ்வாறு இன்று ஈழத்தின் பிரபல பத்திரிகையாளர்களில் ஒருவராகத் திகழும் 'தியாகி'யார் அன்று எழுதினர்.

ஐந்து இதழ்களிலும் அன்புதாசன், உ. மா., மூதூர் ராசா, தியாகி, அபேதன், வரதர், தாழையடி சபாரத்தினம், மகாகவி, சக்தி, இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், பண்டிதர் செ. நடராசா, பதுர்தீன், பாலேஸ்வரி, புதியுவன், அ. செ. மு. ஆகியோரும் இன்னும் பலரும் எழுதிய கட்டுரை, கதை, கவிதை, செய்திக்கடிதம் எல்லாம் பிரசுரமாயின. பன்னிரண்டு பக்கங்களில் பாதிக்குமேல் விளம்பரம். அகில இலங்கைக்கும் கடல்கடந்து தமிழகம் வரை சென்றும் அது புகழ்பரப்பிற்று. கிழக்கு இலங்கைப் பிரவேசம், ஈழத்துத் தமிழ்த் துறவிக்குத் தமிழகத்துக் கர்மயோகி,[ அந்நாள் கல்வியமைச்சர் அவிநாசிலிங்கம் செட்டியார் ] நினைவுமண்டப அத்திபாரக் கல் நாட்டிய மட்டுநகர் கண்ட 'தமிழ் விழா' போன்ற சிறப்புக் கட்டுரைகளும் வெளிவந்தன. என் சொந்தப் பத்திரிகை முயற்சி இவ்விதமாக வெற்றிகரமாகத் தோல்விகண்டபோதிலும் இலக்கியவாழ்வில் நாம் சோர்ந்துபோய்விடவில்லை. சில மாதகாலத்தில் நானும் சபாரத்தினமும் இருபேருமே கொழும்பில் அந்நாளில் நடைபெற்ற 'சுதந்திரன்' தினசரியின் ஆசிரியர்குழுவிற் சேர்ந்தோம். இருபேரும்

பரிசுபெற்ற எழுத்தாளர்களாக ஆங்கு வரவேற்புப்பெற்றேம். [அந்நாளிற்றான் தாழையடியார் 'கல்கி' சிறுகதைப் போட்டியிலும் நான் இலங்கை வானெலி நாடகப்போட்டியிலும் பரிசு பெற்றிருந்தோம்] நம்மிருபேர் பிரவேசத்துடனும் "சுதந்திரன்" தினசரி ஈழத்து நாற்றிசை முன்னணி எழுத்தாளர்கள் பலரை அதன் ஆசிரியர் குழுவிலே தாங்கிப் பெருமை பெற்றுத் திகழ்வதாயிற்று. எழுத்திலக்கியமும் வளர்ந்தது. சொந்தப் பத்திரிகை தொடங்கியபின் இலங்கைக்கு முதல் தடவையாக அவ்வாண்டு வந்த 'கல்கி' யார் "என் நண்பர்கள் பலர் அங்கிருக்கிருர்கள் அவர்களை நான் அவசியம் பார்க்கவேண்டும்" என்று கூறியவராய் ஒருதினம் "சுதந்திரன்" காரியாலயம் தேடியே வந்துவிட்டார்.

ஃ ஃ ஃ

சுதந்திரன் காரியாலயத்தையும் ஆங்கு என்கூடப் பணியாற்றிய பழைய நண்பர்களையும் மறந்து பல ஆண்டுகளின் பின் 1956 பொதுத்தேர்தலில் என் பழைய நாள் சுதந்திரன் காரியாலய சகபாடி மட்டுநகர்ச்சேயோன்இராசதுரை பாராளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற செய்தியை ஒரு நள்ளிரவு வானெலியில் கேட்டபோது என்னை மறந்த மகிழ்ச்சி பரவசத்தினுல் துள்ளிக் குதித்தேன்.

ஃ ஃ ஃ

......ஆலைச்சங்கு இராப்பகலாய் முழங்குகிறது. வேகவாகனங்கள் கிராமங்களை மின்வேகத்தில் இணைக்கின்றன. பேய் வாழ்ந்த சுடுகாடுகளில் பெருவிளக்குகள் பிரகாசிக்கின்றன. இருள் மண்டிய மூலை முடுக்குகள் ஒளிமயமாகின்றன. பனங்காட்டின் நடுவேயும் வெட்டவெளிக் கட்டாந்தரையிலும் மாந்தரை வாட்டும் நோய், துன்பம், பஞ்சம், பசிப்பிணியை விரட்டி ஓட்டும் அமுத ஊற்றுகள் சுரக்கின்றன. நள்ளிரவு நடுயாமத்தில் மனித உருவில் பேய் பிசாசுகளைப் பார்த்து அஞ்சிய காலம் மலையேறிப்போய் அதே நள்ளிரவு நடுயாமத்தில் அரக்க விசை அசுர வேகமாக இயங்கும் தொழில் சக்திப் பிசாசு அவதாரங்களை ஊரெங்கும் நாடெங்கும் பார்க்கிறேம்.

விநோத உடையில், விசித்திரு வேடங்களில் காலத்துக்குக் காலம் இவ்விதமாக எத்தனையோ பேயும் பசாசும் மோகினி மாயையும் அகாலவேளையில் அசந்தர்ப்பமாகத் தோன்றி அச்சுறுத்தி நயமாகவும் பயமாகவும் அடக்கியாண்டு வெற்றிகண்டு நம்மைக் குதிரைகொண்டு வெற்றிப் பவனி வந்திருக்கின்றன. நீண்ட நெடுங் காலம் நம்மை ஆட்டிவைக்க இவ்வகைப் பசாசுகளின் சிறைக்குள்ளிருந்து விடுதலை பெற்றுலே நாம் உண்மையிற் சுதந்திரம் எய்தியவர்களாவோம் என்று நம்மைப் பீடித்த பசாசுகள் போயின என்ற கற்பனை சுதந்திரக் கும்மி பாடினுர் பாரதியார்.

நாம் பள்ளிசென்றகாலை தெல்லிப் பழைக் கிராமத்திலிருந்து இளவாலைக் கிராமத்துக்குத் தோளில் தபாற் பொதி சுமந்து காலை மாலை தினமும் பத்துக்கல் கடுகி வழி நடந்த தபால்காரர் தம்பி முத்துவைத் தினமும் பாதிவழியில் சந்தித்தோம் தபால்காரர் தம்பிமுத்துவின் சகாப்தம் பழைய சகாப்தமாக இரண்டாம் உலகப் போருக்கு முந்திய கனவாய் பழங்கதையாக மெல்ல மறைந்து கிராமங்கள் தோறும் தபால் நிலையங்கள் தோன்றியிருக்கின்றன.

இப்படியாக நம்மைச் சூழ்ந்த சமூக வாழ்விலும் சமூக அமைப்பிலும் காலச் சக்கரத்தின் நியதியாக நாளும் பொழுதும் மலர்ந்து மடியும் பொய்கை அலரிகளாக எவ்வளவோ மாறுதல்கள், எத்தனையோ புதுமை புரட்சி...

அம்பனைக் கலைப்பெருமன்றம் இன்று நிலை பெற்றிருக்கும் இதே நெடுஞ்சாலை வழியாக நெல்வயலில் உயர் வரம்புமீது நடப்பது போல் நடந்து சென்றே சிறு வயதில் பள்ளித்தலம் சென்றேம். நெல் மணமும் அத்துடன் பசும்புல்லின் குளிர்ந்த நறுமணத்தையும் சுமந்து வந்த வயற் காற்றை அநுபவித்துக் கொண்டே மாண

வச்சிரூர் பருவம் முதலாக நீண்ட நெடுங்காலம் வழிநடைத் தோழர்களு டனே கலந்துரையாடி கருத்துப் பகிர்ந்து விவாதித்து விளையாடி குறுநடை பயின் ரேம். காலச்சக்கரம் சுழன்ருேடிப் போகி றது. சாலையின் இருமருங்கிலும் நவ நவமான மணி மண்டபங்கள், வன்னிய சிங்கம் வீதி, துரையப்பாபிள்ளை வீதி, கல்லூரித்தாபகர் உருவச்சிலை... இன்னும் எவ்வளவோ புதிய மாறுதல்கள்.

ஆனாலும் நமது சிறு பராயம் முத லாக நாம் உட்கொண்ட அதே வயற் காற்று, நமது முந்தையர் ஆயிரம் கன வுகள் கண்டு ஏர்பிடித்துச் சுழன்று வந்த அதே நிலப்பரப்பு, வெட்டவெளி வாயு மண்டலமாக இன்னமும் கண்முன்னே விரிந்து கிடக்கிறது.

ஆம், அங்கு வீசுவது அன்றும் இன் றும் வீசிக்கொண்டிருப்பதெல்லாம் தமிழ்த் தென்றல், தமிழ்வளர்க்கும் பொதிய மலைக்காற்று.

## அ. செ. முருகானந்தன்

1921ஆம் ஆண்டு அளவெட்டியிற் பிறந்த இவர் தமது 20ஆவது வயதில் எழுத்துத்துறையில் ஈடுபட்டார். அன்று முதல் இன்று வரை அவர் எழுத்தாளராகவும், பத்திரிகையாளராகவும் விளங்கிவருகி ருர். எழுத்தோவியங்களை நாட்டுக்குப் படைத்ததுடன் பத்திரிகை நடத்தி எழுத்துலகில் ஒரு புதிய இடத்தைப்பெற்றவர். 1950 ஆம் ஆண்டு இவரால் வெளியிடப்பட்ட **புகையில் தெரிந்த முகம்** என்னும் குறுநாவல் எழுத்துலகில் இவரைப் பிரபலப்படுத்தியது. அன்று முதல் இன்றுவரை அவர் படைத்த படைப்புக்கள் ஒரு பெரிய பட்டியலில் அடங்கக் கூடியன.

எழுத்துலகில் இவரது படைப்புக்களின் பட்டியல் பின்வருமாறு:

- முழுநாவல் — 1
- சிறுகதைகள் — 100
- கட்டுரை — 500
- இலக்கிய நாடகம் — 10
- மொழிபெயர்ப்பு — 5
- குறுநாவல் — 1 (நூல்)
- வானொலியில் ஒலிபரப்பான நிகழ்ச்சிகள் — 30
- பத்திரிகைகளுக்காக நாடத்திய இலக்கியப் போட்டிகள் — 8
- நடாத்திய பத்திரிகைகள் — 2 (எரிமலை, மறுமலர்ச்சி)
- கடமையாற்றிய பத்திரிகைகள் — ஈழகேசரி, சுதந்திரன், வீரகேசரி, ஈழநாடு.

இலங்கையில் சிறுகதை, நாவல் வளர்ச்சிக்கு அத்திவாரம் இட்டவர்களில் இவரும் ஒருவர் என்று கூறலாம்.

— இலங்கைக் கலாச்சாரப் பேரவையின்
தமிழிலக்கிய விழா மலர் — 1972

# நெஞ்சில் நிற்பவை......

நான்கு ஆண்டுகள் மெல்ல உருண்டோடி விட்டன. நெஞ்சில் நிற்கும் கடந்த காலத்தின் பசிய நினைவுகள் இதயத்தில் அருட்டுணர்வை ஏற்படுத்துகின்றன. சிறு நடைபயின்று மென்குதலை மொழிபேசிய நாட்கள் போய், மனிதனாக மலரவேண்டிய நினைவு. ஆம், ஐந்தாவது ஆண்டு. கலைப்பெருமன்றத்தின் பன்முகப்பட்ட செயல்கள் விரிவடைகின்றன.

சென்ற ஆண்டு உழவர் விழாவிலே இலக்கியத்துறையில் 30ஆண்டுகளுக்கு மேலாக அயராது பணிபுரியும் இரசிகமணி கனக. செந்திநாதனைக் கௌரவித்து இலக்கியச் செல்வர் என்ற விருது வழங்கினோம். நாம் தொடர்ந்து பல்வேறு நிலைகளில் நடாத்திய கருத்தரங்கங்கள், கவியரங்கங்கள், இலக்கியச் சர்ச்சைகள், ஆய்வரங்கங்கள் எம்மைப் புதிய துறைக்கு வேகமாக இட்டுச் சென்றன. கவிதைத்துறையிலே சமகாலக் கவிதைத்திறனாய்வு என்ற பரிசோதனை முயற்சியையும் மேற்கொண்டோம். எமது செயற்பாதை வேகமாக விரிவடைகின்றது.

தமிழ் வளர்ச்சிக்கும், நாடக வளர்ச்சிக்கும் அயராது சேவை புரிந்துவரும் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியருமாகிய கலாநிதி சு. வித்தியானந்தனின் இருபத்தைந்தாண்டுக் காலப் பல்துறைப் பணிகளையும் பாராட்டிக் கடந்த ஆண்டிற் கௌரவம் செய்தோம். நூல் வெளியீட்டுத் துறையிலும் முன்னின்று, புலவர். ம. பார்வதிநாதசிவத்தின், 'காதலும் கருணையும்' என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டதுடன், புலவர் தமிழ்மாறனின், நீதான் என் காதலி என்ற சிறுகதைத் தொகுதியையும் அறிமுகஞ் செய்து திறனாய்வும் செய்தோம். பட்டிமன்றங்களும், திறனாய்வு அரங்குகளும் சாதனைகளின் வேகத்தை அதிகரித்தன.

'ஈழத்து நவீன இலக்கியத்தின் விடிவெள்ளி'யாகிய பாவலர். தெ. அ. துரையப்பாப்பிள்ளை நூற்றாண்டு விழா நிகழ்ச்சியோடு இணைந்து தெல்லிப்பழை - அம்பனை வீதியைப், "பாவலர். துரையப்பாபிள்ளை வீதி' எனப் பெயர் சூட்டு விழா நடாத்தினோம்.

நாடகத் துறையிலும் சென்ற ஆண்டு எமக்கு ஒரு வெற்றி ஆண்டேயாகும். 'சிதைந்த வார்வு' என்ற எமது சமூக சீர்திருத்த நாடகம், குரும்பசிட்டி வளர்மதி சனசமூகநிலைய நாவலர் ஞாபகார்த்த நாட-

கப் போட்டியிலே முதற் பரிசு பெற்றுத் தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்துக் கொண்டது. சித்தன்கேணி சிவச்செல்வி கலாமன்ற யாழ் மாவட்ட நாடகப் போட்டியில் முதற்பரிசான தங்கப்பதக்கத்தையும் சிறந்த நடிகருக்கான பரிசையும், நீங்காத நினைவு என்ற நமது இன்னொரு நாடகம் பெற்றுக் கொண்டது. 'நல்ல தீர்ப்பு' என்ற சமூகசீர்திருத்த நாடகம் காங்கேசன்துறை இளந்தமிழர் மன்ற நாடகப் போட்டியில் முதற்பரிசையும் சிறந்த நடிகைக்கான பரிசையும் பெற்றது. நாடகத் துறையில் எமது வளர்ச்சிக்கான பாதை மேலும் விரிவடைகின்றது. சமூக சீர்திருத்த நாடகங்களை மேடையேற்றிவந்த எமது மன்றம் இவ் வாண்டு வரலாற்று நாடகத்தைத் தயாரிக்க முனைந்துள்ளது. ஈழத்தின் பிரபல நாவலாசிரியரும், சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற நாடக ஆசிரியருமான திரு. த. சண்முகசுந்தரத்தின் "இறுதிமூச்சு" என்ற நாடகத்தைத் தயாரிக்கின்றோம்.

சமூக சீர்திருத்தத்துறையில் எமது மன்றம் பற்பல சேவைகளைச் செய்துள்ளது. தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்ற சிரமதானப் பணியில் முக்கிய பங்கு வகித்தோம். நூல்நிலைய அமைப்புக்காக ஊராட்சி மன்றம் நடாத்திய களியாட்டவிழா அமைப்பில் எமது மன்ற அங்கத்தினர் பங்கு மிக முக்கியமானது.

ஒருகணம்! எமது கடந்த காலச் சாதனைகள்... நினைவுகூரும் போது நெஞ்சில் நிற்கின்றன. எமது பணி தொடர்க! வளர்க! வெல்க!


# வளர்மதி வைத்தியசாலை

பதிவு இல. 5217

**சண்டிலிப்பாய்**

★

கிளை : பாவலர் துரையப்பாபிள்ளைபிள்ளை வீதி, தெல்லிப்பழை

ஆஸ்த்துமா, சிறுபிள்ளை ரோகங்கள், சுவாதம், சன்னி, பாரிச வாதம், மருத்தீடு மற்றும் சகல ரோகங்களுக்கும் குறைந்த செலவில் சிகிச்சை செய்யப்படும். கண் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு விஷேச சிகிச்சை உண்டு.

★

டாக்டர் S. திருநாவுக்கரசு D. A. M. & R. I. M. P., H. O. M. P.

[நாகமுத்து பரம்பரை வைத்தியம்]

*Space Donated by*

**Studio Princess**

K. K. S. Road

**CHUNNAKAM**

## தங்கலக்சுமி றேடேர்ஸ்

பாவலர் துரையப்பாபிள்ளை வீதி,

தெல்லிப்பழை

(சேச் வீயு)

உங்களுக்குத் தேவையான

- **சீலிங் பலகைகள்**
- **சப்புப் பலகைகள்**
- **சகல கட்டடங்களுக்கும்**

தேவையான மரங்கள்

மலிவான விலையில்

தொகையாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர் : செ. குணபாலசிங்கம்



**ஓடர் நகைகள்**

குறித்த தவணையில்

உத்தரவாதத்துடன்

கவனிக்கப்படும்.

எவ்வித மங்கள வைபவங்களுக்கும்

தேவைப்பட்ட

தங்க வைர நகைகளுக்கு

விஜயஞ் செய்யுங்கள்.

## முருகன் ஆபரண மஹால்

**சுன்னுகம்**

(பஸ் நிலையத்துக்கு முன்னுல்)

சகலவிதமான

* கடிகாரங்களைத் *

திருத்துவதிற்

பிரபல்யம் மிக்கவர்கள்

## பாத்திமா வாச் வேக்ஸ்

48, மெயின் வீதி

**பண்டத்தரிப்பு**

---

## கெனடி வாச் வேக்ஸ்

85, மெயின் வீதி

**யாழ்ப்பாணம்**

உரிமையாளர் : ஏ. சந்தியாப்பிள்ளை

உயிரோவியமான

புகைப்படங்களுக்கு

↓

## சித்திரகலா

படப்பிடிப்பாளர்கள்

**கே. கே. எஸ். வீதி,**

**சுன்னாகம்**

---

நீங்கள் விரும்பும்

றெடிமேட் உடைகளுக்கு

யாழ்ப்பாணம் நவீன சந்தையில்

இருக்கும்

## நியூ டீசன்ஸ்

ஸ்தாபனத்துக்கு

விஜயஞ்செய்யுங்கள்

**தையல் வேலைகளும்**

குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.

15, நியூ மாக்கற் உட்புறம்

**யாழ்ப்பாணம்**

கிளை : **டீசன்ஸ்,** 30, பெரியகடை

யாழ்ப்பாணம்


---

சகலவிதமான

★ **கைக்கடிகாரங்களும்:**

★ **மணிக்கூடுகளும்**

திருத்திக் கொடுப்பவர்கள்




## சில்வா வாச் வேக்ஸ்

10, நவீன மத்திய சந்தை

**ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

---

## HOME D LITES

REGD. ELECTRICAL CONTRACTORS

AND

DEALERS IN ELECTRICAL GOODS

↓

7, Model Market Show Room

Hospital Road

**JAFFNA**

சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களால்
தயாரிக்கப்பட்ட

★ செருப்பு
★ சப்பாத்து

வகைகள் எம்மிடம்
எந்த நேரத்திலும்
பெற்றுக்கொள்ளலாம்.

ஓடர்கள் குறித்த தவணையில்
செய்து தரப்படும்

மோகன்ஸ்
கே. கே. எஸ். வீதி
தெல்லிப்பழை

உயர்ந்தரகம் குறைந்தவிலை

மங்கையர் மனங்கவரும் புடைவைத்தினுசுகளையும் ஆடவர் விரும்பும் அதி உன்னத சேட்டிங் சூட்டிங் தயாரிப்பு உடைகளையும் தெரிவு செய்யவேண்டுமா?

இன்றே விஜயஞ்செய்யுங்கள்

கமலாஸ் காமென்ஸ் ஸ்தாபனத்தாரின் தயாரிப்பு உடைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணஸ்
48, நவீன சந்தை
யாழ்ப்பாணம்

எங்களிடம்

- ★ சீமெந்து
- ★ கட்டடப் பொருட்கள்
- ★ விவசாயக் கருவிகள்
- ★ பெயின்ற் வகைகள்
- ★ நீரிறைக்கும் இயந்திர உபகரண பைப் வகைகள்
- ★ அஸ்பெஸ்ரஸ் சீற்
- ★ அலுமினியப் பாத்திரங்கள்

எந்நேரமும் சகாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

இன்றே விஜயஞ்செய்யுங்கள்.

ஈஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
சுன்னுகம்

- For Special Occasions
  - O Wedding Cakes
  - O Birthday Cakes
  - O Christmas & New Year Cakes
  - O Sand Wich Bread Runcakes Etc.
- Orders Executed
- Distributors :

WIMALA BABYLAND
BISCUITS

Sri Ananda Bakery
Bakers & Confectioners
K. K. S. Road
TELLIPPALAI

# Veeravagu & Co

WHOLE SALERS

&

RETAILERS

*Dealers in:*

OILMAN GOODS

FANCY GOODS

&

MILK FOODS

*Head Office:*
**M.P. Veeravagu & Co**
60, Perakumba St.
Kurunegala
*T'phone:* **327**

No. 1. Super Market
Hospital Road
**JAFFNA**

விவசாயப் பெருமக்களுக்கு
ஓர் வரப்பிரசாதம்

நைருன் M 50
அதிசக்தி பெற்ற கிருமி நாசினி
ரோகோர் 40
நிகரற்ற பூச்சி கொல்லி
பெலிற்ரேதியன்
மிளகாய் குருமன் அகற்றி
றும் றெட்
வெங்காயக் களை கொல்லி
ரையசின்
வாடல், இலைக் கருக்கல் ஆகியவற்றை
தடுக்கும் பங்கசு கொல்லி

மேற்கூறிய இரசாயனப் பொருட்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**ச. சிவஞானம்**

ஜெனறல் டிஸ்றிபியூற்றர்

**126, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்**

# Sivakantha Stores

General Merchants

**66 & 65, New Market**

★

*Dealers in:*

**Oilman Goods**

**Fancy Goods**

**&**

**Milk Foods**

★

## சிவகாந்தா ஸ்ரோர்ஸ

*66 & 65 நவீன சந்தை*

**யாழ்ப்பாணம்**

நவீன வேலைப்பாடுள்ள

✽ **தங்க வைர நகைகள்**

விரும்பிய டிசைன்களில

உத்தரவாதத்துடன்

கிடைக்குமிடம்

## நியூ டிசைன் ஜுவல்லர்ஸ்

68, கன்னதிட்டி

**யாழ்ப்பாணம்**

ரமணி ரெக்ஸ்ரைல்ஸ்

DEALERS IN ALL KINDS OF TEXTILES

**Ramani Textiles**

*166, K. K. S. Road*

**JAFFNA**

அரசாங்கக் கட்டுப்பாட்டு விலையில் செயற்கை உரம், கிருமி நாசினிகள்,

கம ஆயுதங்கள், பழ மரக்கன்று வகைகள், காய்கறி வித்துக்கள், ஆடு மாட்டுத்தீன், பீங்கான் கோப்பைகள் விற்கப்படுமிடம்

கௌரி

**கமக்கலை விருத்தி நிலையம்**

**Gowri Farm Science Promotion Centre**

108, *Kumarasamy Pulavar, Street*

**CHUNNAKAM**

★ மிளகாய்

★ குரக்கன்

★ அரசி

முதலியன அரைத்துக் கொடுக்கப்படும்.

**மகேஸ்வரி கிறைண்டிங் மில்**

கே. கே. எஸ் வீதி

**மல்லாகம்**

உரிமையாளர்: க. இரத்தினம்

சகலவிதமான ஆயுர்வேத மருந்து வகைகளும் மூலிகை வகைகளும் கோயிலுக்குரிய அபிஷேகத் திரவியங்களும் நிதான விலையில் கிடைக்குமிடம்

**ஐ. பேரம்பலம்**

(மருந்துச் சரக்கு வியாபாரம்)

காங்கேசன்துறை வீதி

**சுன்னாகம்**

அச்சுப்பதிவு
குகன்
அச்சகம்
தெல்லிப்பழை

உங்கள் கல்வி வளர்ச்சிக்கு

# கல்வி விருத்தி நிலையம்

(அம்பனைச் சந்தி)

துரையப்பாபிள்ளை வீதி : தெல்லிப்பழை

உங்கள் இல்லங்கள்தோறும்
இருக்கவேண்டியவை

'யாழ்' மார்க் அலுமினியப் பாத்திரங்களே

★ அழகும்
★ பிரகாசமும்
★ உழைக்கும் திறனும்

ஒருங்கே அமையப்பெற்றவை

யாழ் மெட்டல் இண்டஸ்றீஸ்
250, 252, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அட்டை, சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பெற்றது.